Registered No. M. 878.

75

# பூர்ணசந்திரோதயம்.

சென்னை ராஜதானியின் தென்பாகத்திலுள்ள
பிரஹ்மஞானக் கிளைச்சங்கங்களின் மஹாசபையின்
ஆதரவின்மேல் மதுரையில் பிரசுரமாகி நடைபெறும்

## மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை.

தொகுதி 1. } 1910௵ ஜூலை௴
சாதாரண ௵ ஆடி ௴ { பகுதி 3.

ப. நாராயண அய்யர் B. A., B. L., F. T. S.
அ. ரங்கஸ்வாமி அய்யர் B. A., B. L., F. T. S. } பத்திராதிபர்.

மதுரை:
விவேகபாநு அச்சியந்திரசாலையில்
பதிப்பிக்கப்பெற்றது.

## பொருளடக்கம்.


| | |
|---|---|
| | பக்கம். |
| தன்னைமறந்தால் தலைவனைக்காணலாம்—ப. நாராயண அய்யர் | ௬௫ |
| பூர்வஜன்மங்களைக்கண்டுபிடிக்குமுறை—ஷை | ௭௧ |
| கர்மவிதியின் உண்மை—வி. வெங்குஸ்வாமிஅய்யர் | ௭௬ |
| பகவத்கீதையும் கருமயோகமும்—அ. ரங்கஸ்வாமிஅய்யர் | ௭௮ |
| சங்கீதம்—அதன்உயர்வும் தாழ்வும் } பி. எஸ். சுப்பிரமணியஅய்யர் | ௮௧ |
| அவதாரங்களின், முக்கியமாய் பரசுராம அவதாரத்தின் உண்மை } தி. சதாசிவஅய்யர் | ௮௬ |
| சமாசாரம்—பத்திராதிபர் | ௮௯ |
| புத்தக வரவு—ஷை | ௯௮ |



# THE
# ORIENTAL PROGNOSTIC OBSERVATORY.

*Corresponding Director:* **V. V. Ramanan.**

F. Z. S. (LOND), O.M.D.S.F.V. (BERLIN).

M.O.S.M.F. (PARIS); ETC.

***Charges very moderate for the work turned out!***

We do not for a moment deny that there are plenty of imposters who in the name of astrology are making false predictions and thus bringing a noble science into ill-deserved contempt. But our predictions are guaranteed and based on the most reliable canons of all the systems, Asiatic and European. Struck by our abilities in interpreting planetary influence, that NESTOR of "MODERN ASTROLOGY" in the West, Mr. ALAN LEO, writes to us

"Just give us the cream of your system and MAKE YOUR NAME FAMOUS IN THE WEST"

Apply with birth-data, and an initial fee of Rs. 6 stating requirements to the undersigned:

1, SAMI PILLAI ST. }
Chulai, Madras N. C. }

**V. V. RAMANAN,**
*Corresponding Director.*

இந்த ஸ்தானத்தை ஜனங்கள் அடையவே, பழக்க முறையாக, இல்வாழ்க்கையின் அபிமானம், ஜாதி அபிமானம், தேசஅபிமானம், பின்பு நன்மையின் அபிமானம், பின்பு எங்கும் தர்மம் நிகழவேண்டுமென்ற அபிமானம், இவ்விதம் உலகவாழ்வு நடைபெறுகின்றது. இதனுள் நாம் கொஞ்சம் அறிவைச்செலுத்திப்பழகமுயலுவோமாகில், பிரஹதாரண்ய உபநிஷத்தில், யாக்கியவல்க்கியர் தம்மறிவுள்ள பத்நிமைத்திரேயியுடன் செய்த சம்பாஷணையின் உயர் நலம் நமக்குக்கிடைப்பதாகும். அதாவது, பாரியையின் பொருட்டு பாரியையின்மேல் பிரியம் அன்று. ஆன்மாவின்பொருட்டு பாரியையின்மேல் பிரியமாம். புத்திரன்பொருட்டு புத்திரன்மேல் பிரியம் அன்று. ஆன்மாவின் பொருட்டு புத்திரனின்மேல் பிரியமாம். அவ்வாறே உலகத்திலுள்ள எல்லாஜீவராசிகளிலும் உள்ள பிரியம் அந்தந்த ஜீவராசிகளின் பொருட்டன்றாம். ஆனால், அவைகளில் உள்ளஆன்மாவின்பொருட்டே அவைகளின்மேல்பிரியம் என்றுஎற்படுகிறது. ஆகவே ஆன்மா எங்கும்பரவியிருக்கிறான். ஸர்வவியாபி, நானாவிதமான நாமரூபங்களில் வேறுவேறாக இருக்கின்றமைபோல தோன்றுகிறான், ஆன்மா உண்மையில் ஒன்றே. ஒன்றே இறைவன்.

"மண் ஒன்று தான் பல நற்கல மாயிடும்
உள்நின்ற யோனிகள் எல்லாம் ஒருவனே
கண்ஒன்று தான் பல காணும் தீனக்காணு
அண்ணலும் அவ்வண்ணம் ஆகிநின் றானே"—திருமூலர்.

என்று உணர்ந்து நான் எனது என்ற பாவத்தைவிட்டு, எல்லாம் ஈசன் செயல், எல்லாம் அவர் ஆதீனம், நாம் அவரின் சேவகன், நம் செய்கையெல்லாம் அவர் கைங்கரியம் என நினைந்து நாம் ஒழுகுவோமானால் தலைவனைக் காணலாம்.

3. ஒரு உதாரணம்:— கொடையில் கர்ணன் பெரியவன். ஆனால் நான் என்ற அஹம்பாவத்தினால் இறுமாப்புடன் எல்லாக் கொடையும் கொடுத்தான். அதனால் அவன் பகவான் கிருஷ்ணனின் உண்மையை அறிந்தானில்லை. என்ன இறுமாப்புடன் ஒருவன் கொடை கொடுத்தாலும், கொடுக்கிறவன்மேலானவன் எனநினைந்து, பகவான், கர்ணன்மேல் கிருபைகூர்ந்து, அவன் இறக்குமுன் தம்மு

டைய அவதாரத்தின் உண்மையைத் தெரிந்துகொள்ளவேண்டுமெனக்கருதி, ஒரு ஏழைப்பிராஹ்மண வேஷம்பூண்டு அவனிடம் யாஜித்தார். கர்ணன் தன்னிடம் ஒன்றும்இல்லையே என்றுசொல்ல, "உன்னிடம் இருக்கிறதைத்தான் கேட்பேன்" என அப்பிராஹ்மணனுத்தமர் சொன்னார். அப்படியானால் "கொடுக்கிறேன், நீவிர் கேளும்" என்று கர்ணன் சொன்னான். அப்பிராஹ்மணர் "நீ இதுவரையில் கொடுத்த கொடையின் பலனை எனக்குக்கொடு" என்றார். கர்ணன் "என்னிடம் உள்ளதை கேட்டீரே மஹாநுபாவரே, கொடுத்தேன்" என்றான். இவ்விதம் சொன்னமாத்திரத்தில், பிராஹ்மணன் இருந்த இடத்தில் ஸர்வேசுவரனை கர்ணன் சாக்ஷாத்கரித்தான். தான் செய்த தர்மங்கள் எல்லாம் நான் என்ற இறுமாப்புடன் கலந்தமையால், ஈசுவரனை அறியாமல் போனான். அந்நான் என்ற களங்கம் விலக்கப்பெறவே, கர்ணன் தலைவனை, இறைவனை காண்பான் ஆயினன்.

4. "எவ்வுயிரும் பராபரன்சந்நிதியதாகும், இலங்கும்உடல் உயிரனைத்து மீசன் கோவில்" என்ற உண்மையை உணருவோம். ஈசன் எனக்கருதி எல்லா உயிர்களையும்நேசத்தால் நினைத்துகொள்." "நேசத்தால்" என்றார் ஔவையார். அன்பு இன்றி அருந்தவம் இல்லை. "அன்போடு உருகி அகங்குழைவார்க் கன்றி என்போன் மணியினை எய்தவொண் ணாதே." இக்கருத்தைக்கொண்டே "ஊனினை நீக்க உணர்தல்" என்றார் திருமூலநாயனார். வேற்றுமைப்படுத்தும் சரீரங்களை நீக்கி, சரீரியாகிய ஒருவனே உளன் என்று அறிதலாம். இத்தகைய பழக்கத்தினால், தன்னை மறந்தால், தலைவனை, அதாவது இறைவனைக் காணலாம். இதனுள் எல்லா ஆராதனைகளினுடையவும் எல்லா உபாசனைகளினுடையவும் தத்வம் அடங்கும். இம்முறையில் அன்பு மிகுதியாக நிகழும்.

5. அவரோஹண முறையாவது:— அதற்கும் உவமைத்தரிசநம் ஒன்றை எடுத்துக்காட்டுவோம்.

ஒரு கெண்டாமணி பலமாய் அடிபெற, நாம் முதலில் பெரிய தொனியையும், பின்னர் வரவரக் குறுகிக்கொண்டுவரும் மெல்லியதொனியையும், கடைமுறையில், சூந்யமாம் நிலையில் இருப்பதையும்

அறிவோம். இத்தொநி வழிமுறையிலேயேநாம்செல்லச்செல்ல, கடைசியில், நிசப்தமாம் ஒன்றுமில்லாத சூந்யநிலையை உணருவோம். அவ்விதமே, நான், எனது என்ற பாவங்களில் நான்என்ற பொருள் அந்நமயகோசமா, பிராணமயகோசமா, மநோமயகோசமா, விஞ்ஞாநமய கோசமா, ஆநந்தமயகோசமா, அதற்குப்புறம்பாய் இருக்கின்றதா, என பிரஞ்ஞையின் ஆராய்ச்சிமுறையில் விசாரணை நிகழும்போது, இக்கோசங்களெல்லாம் நான் அல்லன், இவைகளை எல்லாம் தாண்டி அப்பால், அறிவுமயமாய் எங்கும் நிறைந்திருக்கும் பொருளே நான்என்பது என்றுஉணர்வோம். இப்படி உள்நோக்கிச்செல்லுகையில் அகந்தை அதாவது பிரதக்பாவம் முற்றும் அற்றுப்போகின்றமையால், உவமையில்கண்ட மணி ஒலி கடைமுறையில்சூந்யமாதல்போல அஹம்பாவமும் அகங்காரமும் சூந்யமாகும். அப்போது பளீர் என்று அகண்டாகார விர்த்திஞானம் ஏற்படும். "ஹம்ஸ: ஸோஹம் " என்ற உபாசனையின் உயர்நலம்உண்டாகும்.

6. இதனால்அந் நான் என்றவஸ்துவின் பரிமாணத்தைப்பற்றி அடியில்வருமாறு ஸ்வேதாஸ்வதரோபநிஷத்தின் மந்திரம் உபதேசிக்கின்றது.

வாலாக்ரஶதபாகஸ்ய ஶததா கல்பிதஸ்ய ச।
பாகோ ஜீவஸ்ஸ விஜ்ஞேய: ஸ சாநந்த்யாய கல்பதே॥

இதன் பொருள்:—ஒரு மயிரை நூறுபங்குசெய்து, அதனால் ஏற்படும் ஒரு பங்கை மறுபடி நூறுபங்குசெய்தால், அந்த ஒருபங்கின் அளவேயாகும் ஜீவாத்மா, ஆயினும் அநந்தமாக இருப்பதாக நினைக்கற்பாலதாகும்.

இதையே திருமூலநாயனாரும் பின்வரும் பாசுரத்தில் தெளிவு பண்ணியிருக்கிறார்.

மேவிய ஜீவன் வடிவது சொல்லிடின்
கோவின் மயிர்ஒன்று நூறுடன் கூறிட்டு
மேவிய கூறது ஆயிர மாயினால்
ஆவியின் கூறுநூ றாயிரத் தொன்றே.

7. இவ்விரண்டு முறைகள் உலகில் ஜனங்களில் இருவிதமனத்தின் சுபாவமுடையார்களை நோக்கியவையாம். ஒரு திறத்தார் அன்பின் இயல்பினராய், அதன்வழிப்பட்டு, தம்முடைய அன்பைவரவர மேன் மேலும் தூய்மைப்படுத்தி விரிவாக்கி, அன்பின் வடிவாய் நிற்றலே தம் எல்லையென உணர்வராவர். இவர்கள் இறைவனை ஆநந்த சுபாவ ரூபியாகக் காண்பர். இவர்கள் கொள்கை இதுவாம்.

“அன்பும் சிவமும்இரண் டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவது யாரும் அறிகிலார்
அன்பே சிவமாவது யாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந் தாரே.”—திருமூலர்.

இம்மார்க்கமே, யாவருக்கும் எளிதான மார்க்கம். இஃது இல்லறத்தார்க்குமிகப்பொருத்தமான மார்க்கம். இம்மார்க்கத்தில் கர்மயோகம் பக்தியோகம் மிகப்பயன்படும்.

மற்றொருதிறத்தார் விஞ்ஞான பயிற்சியின் மிகுதியால், வஸ்துவிசரணைசெய்துகொண்டுபோக இதுநான்அல்லன், இதுநான்அல்லன், என்று நேதி நேதி செய்துகொண்டேபோய், கடைமுறையில் நான் என்ற வேற்றுமை எண்ணம் நீங்கிப்போம். போகவே, இறைவனை சத்சித்ஸ்வரூபியாகக்காண்பார். இத்தகையஅறிவாளர்க்குஇம்மார்க்கத்தில், ராஜயோகம் என்ற பதஞ்சலியார் யோகம் மிகப்பயன்படும். இது கஷ்டமான மார்க்கம். இம்மார்க்கத்தில் மேன்மேலும்பழக அத்துவைத உண்மையான “தத்துவமஸி” (நீ அதுவாகுய்) என்ற மஹாவாக்கியத்தின் நலம் அநுபவசித்தமாய் ஏற்படும்.

“நான்என்றும் தான்என்றும் நாடினேன் நாடலும்
நான்என்றும் தான்என்றும் இரண்டில்லை என்பது
நான்என்ற ஞானமுதல்வனே நல்கினன்
நான்என்று நானும் நினைப்பொழிந்தேனே.—திருமூலர்

ஓம் தத் ஸத்.

ப. நாராயணன்.

---

## பூர்வ ஜன்மங்களைக்கண்டுபிடிக்கும் முறை.

தியாஸபிஸ்டு (Theosophist) என்ற பத்திரிகையில் சென்ற எப்பிரல் மாசம் முதல், உலகத்தில் இக்காலத்தில் உள்ள பிரஹ்ம ஞானசபையைச் சார்ந்த சிலர்களுடைய பூர்வ ஜன்மாந்தரச் சரித்திரங்கள் பிரசுரம் செய்து வரப்படுகின்றன. ஸ்ரீமான் லெட்பீடர் (C. W. Leadbeater) என்பார் சூட்சுமதர்சி; முக்கண் திறக்கப்பெற்றவர். ஞான பூமிகளில் ஆராய்ச்சி செய்யும் திறமையுடையவர். இவரும் அன்னிபெஸன்ட் அம்மையாரும் சூட்சும பூமிகளில் ஆராய்ச்சிசெய்து, அதனால் மேற்கண்ட சரித்திரங்களைத் தெரிந்துகொண்டு, அவைகளை வெளியிட்டு வருகின்றார்கள். அவ்வாராய்ச்சிமுறையை மேற்படி பத்திரிகையிலும் மற்றுமுள்ள புஸ்தகங்களிலும் விவரித்திருக்கிறார்கள். அம்முறை எம்மால் அநுஷ்டிக்கப் படாமையால் யாவருக்கும் புலப்படும்படியாக இதில் விரிவாய் எழுதக்கூடவில்லை. தொட்டுக்காட்டாத வித்தை பலனில்லை என்ற பழமொழி இதற்குப் பொருந்தும். ஆயினும், சில முக்கியமான விஷயங்களைச் சொல்லுவோம். நாம் ஒவ்வொருவரும் நினைக்கும் சிந்தனைகள், நம்மைச் சுற்றியிருக்கின்ற, கல், சுவர் முதலியவைகளில், ஒருவிதமான சம்ஸ்கார ரூபமாகப்பதிகின்றன. எங்கும்நிறைகின்ற சூக்ஷ்மமான ஆகாசம் ஒன்று உள்ளது. அது எல்லாவற்றையும் வெளியிலும் உள்ளிலும் ஊடுருவிப்பரவி உள்ளது. அதில், நம் சிந்தனைகள் ஒருவிதமாகப்பதிக்கப்படுகின்றன. அப்பதிப்புக்கள் தான், சித்திர குப்தம் என்ற பெயரால் வழங்குகின்றன. சித்திரகுப்தம்--என்றவார்த்தையின் பொருள் மறைந்த சித்திரங்கள், என்பதாம். அவை யதார்த்தமான கணக்கு. எல்லா காரியங்களும் எல்லா நடபடிக்கைகளும், முதன்மையில் சிந்தனை ரூபமாகத்தான் இருத்தல்வேண்டும். கிராமபோன், போனோகிராப், என்றஇயந்திரத்தில், பலவிதமான, பாட்டுகள், உபந்நியாசங்கள், சிரிப்புகள், முதலாயின, எவ்விதம், நரம்புகள், மெழுகுகள், இவைகளின் மேடுபள்ளங்களில், அமைந்து குப்தமாக அடங்கி யிருக்கின்றனவோ, பின்பு, மேற்படி மேடுபள்ளங்களுடன் ஒரு ஊசி சம்பந்தித்துச் செல்ல, குப்தமாயுள்ள அந்த சப்த

அலைகள் ஸ்தூலமான காதுகளுக்குப் புலப்படும்படியாக வெளிப்படு கின்றனவோ, அவ்விதம், சூக்ஷ்மஆகாசத்திற்குப்தமாக முன்பதிந் துள்ள சிந்தனைகள் முக்கண்திறந்த ஞானிகளால் பார்க்கப்பெற்று வெளிப்படுகின்றன. ஞானி ஓடி கிராமபோனின் ஊசியின் தர் மத்தை வகிக்கின்றார். சூரிய ரஸ்மியால், (photograph) புலனுக்கு தோன்றாத நிழல் படங்கள், எப்படி சிலதிராவகசம்பந்தத்தால் வெ ளியாகின்றனவோ, அவ்விதம், ஞானிகளின் மனக்கண்ணுக்கு இந்த சித்திர குப்தமான சிந்தனைகள் தோன்றுகின்றன. மஹாபாரத யுத் தத்தில், பகவான் கிருஷ்ணன் அருச்சுனனுக்கு விச்வரூப தர்சநம் காட்டியகாலத்தில், அச்சண்டையில் வந்திருந்தவர்கள் எல்லாரும் மாண்டதாக அர்ச்சுனன் கண்டான். பின்புதான் மாண்டார்கள். கிருஷ்ணபகவானுடைய, சங்கற்பங்களையே, தன்னுடையசூக்ஷ்மக் கண்ணால், அர்ச்சுனன்கண்டான், என்பதும் இங்கு கவனிக்கத்தக் கது. இது ஒருமுறை.

2. இன்னும் ஒரு முறையுண்டு. அவன் அவன் கொள்ளும் சிந்தனைகள் அவன் அவன் காரணசரீரத்தின்கண், வாசனை யமான அலைகளாகப் பரிணமிக்கின்றன. ஆராய்ச்சி செய்கின்ற ஞானி, தன்னுடைய காரணசரீரத்தின்கண் தன் பிரஞ்ஞையை நிறு த்தி, ஆராய்ச்சி செய்யப்படுமவனின் காரண சரீரத்துடன் சம்பந்தி த்து, பின்பு, அச்காரண சரீரத்தில் அமைந்துள்ள பூர்வசிந்தனைக ளின் அலைகளை அறிந்து, அவைகளின் உண்மையை வெளியிடுவான்.

3. மூன்றாவதான வேறுஒருமுறையுண்டு. ஞானியானவன், ஆராய்ச்சி செய்யப்படுமவனின் நான் என்ற பாவனையுடன்ஒன்றுபட்டு, அந் நான் என்ற நிலையில்இருந்துகொண்டு, தன்னுடைய விஞ்ஞான சக்திகளை மேன்மேலும் உள்நோக்கிச்செல்லச்செய்து, அம்மனிதன் பூர்வ வாச னைகளையும் அனுபவங்களையும், ஞானியானவன் தன்னுடைய வை களாகவும் தானே நேரில் அனுபவித்தவைகளாகவுந் தெரிந்துகொள் ளுதலாம். இம்முறையில், ஆராய்ச்சி செய்யப்படும் மனிதன் தன் னுடைய அந்தக்கரண பிரஞ்ஞையால், அவ்வாராய்ச்சிக்கு உதவி செய்தல் கூடும். இம்முறைக்கு, ஆராய்ச்சி செய்யப்படும் மனிதன் ஸ்தூல சரீரத்துடன், ஞானியின்முன் நிற்றல் நலம். அது வேண்டு

வது அவ்வளவு முக்கியமன்று. இவ்வராய்ச்சி நிகழும் காலத்தில், சாந்தமும் சமாதானமும் சற்றும் அமைந்து இருத்தல் வேண்டும். இன்றேல், கண்டு அறியும் விஷயங்களை மூளைக்குத்தெரிவித்தல் முடியாது; அதனல், வெளியிட இயலாது. ஞானியின் மனது எவ்விதவிருத்திகளும் அற்றதாக இருக்கவேண்டும்; நிர்மலமான சலகமற்ற மனசாக இருக்க வேண்டும். இவ்வாராய்ச்சியில் சமாதி நிலைக்குப்போய் அதினின்று விஷயங்களை கிரகித்து, பின்பு ஜாக்கிரதா அவஸ்தைக்குவந்து, கிரகித்த விஷயங்களை ஸ்மரணை ரூபமாக கொண்டுவருதல் அவ்வளவு நலமன்று. ஒருகால் ஸ்மரணை தப்பும். அவ்விதம் செய்யாமல் ஜாக்கிரதா அவஸ்தையில் இருந்து கொண்டு பூர்ண அறிவுடனே மேலான பிரஞ்ஞாபூமிகளில் ஆராய்ச்சிசெய்வது தான்நலம். இவ்விதம்ஆராய்ச்சிசெய்வதினல் பிரஹ்மஞானசபையில் சேர்ந்திருக்கின்ற அங்கத்தினர்களின் நூறுபேர்களுடைய பூர்வசரித்திரங்கள் வெளிவரும். இக்காலத்தில் பலதேசங்களில் அவர்கள் பிறந்திருந்தாலும், பூர்வ ஜன்மங்களில் பெரும்பான்மையார் இரத்தசம்பந்தமுள்ள உறவினர்களாக இருந்திருக்கிறர்கள்என்றும், இந்தபிரஹ்மஞான சபையில் அத்தியந்தம் பிரியமும் சிரத்தையும் உள்ளகாரணத்தினல் இப்போதுஅவர்கள் ஜநநம் எடுத்திருக்கிறர்கள் என்றும், ஸ்ரீமான் லெட் பீடர் அவர்கள் சொல்லியிருக்கிறர்கள்.

ப. நாராயணன்.

---

## நன் மொழிகள்,

7. பிறருக்கு நன்மை செய்யாவிடினும் தீமை செய்பற்க.

8. சங்கற்பமே எல்லா வல்லமையுமுள்ளது. அது உலகத்தை ஆளுகிறது. இவ்வுலகம், ஈசுவர சங்கற்பமன்றே? நல்லகதியும் தீயகதியும், அவர் அவர் பூர்வசங்கற்பத்தைப்பற்றியது. ஒவ்வொருவர் தற்கால நிலை, அவர் அவர் பூர்வசங்கற்பத்தின் காரியமாம். ஊழ்வினைப்பயன் என்பது இதுவே. அதனல் மனச்சங்கற்பத்தைப் பற்றி கவனமாய் இரு. அதைத் தூய்மைப்படுத்திக்கொள். அதுவே உன்னை நல்வழிப்படுத்துவதும் தீயவழியில் அழுத்துவதுமாம்.

## கர்ம விதியின் உண்மை.

"நன்மை விதைத்தால் நன்மை விளையும்
தீமை விதைத்தால் தீமை விளையும்."

(1) கர்மம் என்பது பொதுவாய்ச் செய்கையெனப் பொருள் படும். ஆனால் அச்சொல்லின் பிரயோகமானது மிகவும் விரிவுள்ளது. ஏனென்றால் செய்கை யென்னும் சொல்லில் சாமாந்ய மனிதன் நினைப்பதைப் பார்க்கிலும் அதிகமான பொருள்கள் அடங்கியிருக்கின்றன. ஒவ்வொரு செய்கைக்கும் அது உண்டாவதற்கு முன்னுள்ள காரணமும், அதிலிருந்து பின்விளையும் காரியமும் இருக்கின்றன. ஒரு செய்கையில், அதைத்தூண்டும் ஆசையும், அவ்வாசையை உருவமாக்கும் எண்ணமும், இவை இரண்டுசேர்ந்து பின்னர் பரிணமிக்கும் கிரியையும் அடங்கும். ஒவ்வொரு செய்கையும் காரிய காரணங்களென்ற முடிவில்லாச் சங்கிலிக் கோவையில் ஒரு வளையமாகும். ஒவ்வொரு காரியமும் பின்வரும் செய்கையை நோக்கக் காரணமாகவும், முந்தின செய்கையை நோக்கக் காரியமாகவு மேற்படும். இந்த முடிவில்லாச் சங்கிலிக்கோவையின் ஒவ்வொரு காரியமான வளையமும் ஆசை, எண்ணம், செய்கையென்ற மூன்று அம்சங்கள் அமைந்த பொருத்தாக ஏற்படுகிறது. ஒரு ஆசையானது ஒரு எண்ணத்தை உண்டுபண்ணுகிறது. ஒரு எண்ணமானது தானே ஒரு செய்கையாகப் பரிணமிக்கிறது. ஒரு சமயத்தில் ஞாபகரூபமான ஒரு எண்ணமானது ஆசையை மூட்டுகிறது. அந்த ஆசையானது செய்கையாக மலர்கிறது. ஆனால் எப்போதும் இம்மூன்று அம்சங்களும் ஒவ்வொரு செய்கையிலும் உடன் நிகழும். அவைகளில், இரண்டு அம்சங்கள்மறைவாயும் பிரஞ்ஞைக்குமாத்திரம் சம்பந்தப் பட்டவைகளாகவும், மற்றொன்று வெளிப்படையாயும் ஸ்தூல சரீரத்துக்குச் சம்பந்தப்பட்டதாகவு மிருக்கின்றன. இன்னும் வியக்தமாகச் சொல்லுமிடத்து ஒரு செய்கையானது ஸ்தூலமாய் வெளிப்படுமுன் மனத்தின்கண் சங்கல்ப ரூபமாய் இருக்கிறது. ஆசை அல்லது விருப்பம், எண்ணம், செய்கை என்ற இம்மூன்று விதமாக பிரஞ்ஞையானது நடை பெறுகிறது.

(2) ஆசை, எண்ணம், செய்கை இவைகளுக்குள், மேலே விவரித்த சம்பந்தமும், காரணகாரியங்களாகிற இச்செய்கைகளின் முடிவற்ற தொடர்பும், 'கர்மம்' என்று சொல்லப்படுகின்றன. இது எல்லாரும் ஒப்புக்கொள்ளும் பிரபஞ்ச தர்மம். கர்மம் என்றால் காரணகாரியத்துவம் என்று சொல்லலாம். சாஸ்திர முறைப்படி விவரித்தால் அது பின்வருமாறு:—"செய்கையும் அதன் எதிர்தாக்குதலும் (Actionand Reaction) சமமாகவும், நேர்நேராகவும் இருக்கின்றன. அதற்கு நீதிமுறையாக விவிலிய நூலின்கண் ஒரு பிரசித்தமான வசனம் உண்டு. அதைவிட அதிகத் தெளிவாய் எடுத்துரைத்தல் முடியாது." "அவனவன் விதைப்புக்குத் தக்கபடி அவனவன் அறுப்பு ஏற்படும்." ஒருசம்பம் அதை சமநிலை நியாயம் (Law of Equillibrium) என்று சொல்லுவதுமுண்டு. ஏனென்றால் எவ்விடத்தில் சமநிலைக்கு ஹானி நேரிடுகிறதோ, திரும்பவும் அச் சமநிலைத் தன்மை ஏற்படுவது பிரபஞ்சத்தின் தர்மமாம்.

(3) இவ்விதமாய் கர்மமென்பது ஈசுவர சிருஷ்டியில் நீதிவழுவா நெறிமுறை, அவரிடத்தில் (ஈசுவரனிடத்தில்) எவ்விதமாறுதலும் இல்லை, அவரிடத்தில் எவ்விதமாற்றமும் கொஞ்சமேனும் இல்லை, என்பது பெரியோர் வாக்கியம். பிரபஞ்ச சுவாபாவிகமான விதியை அதிக்கிரமிக்கக் கூடாத் தன்மையும், பிரபஞ்ச சுவாபாவிகயான நீதிமுறையின் உறுதிப்பாடும், பிரபஞ்ச சுவாபாவிக தர்மத்தை பூர்ணமாய் நம்புதற்குரிய தன்மையும், ஆகிய இவைகள் இந்தப் பிரபஞ்சத்திற்கு உறுதியான அஸ்திவாரங்களாம்; இவைகள் இன்றேல், சமயமில்லை; சாஸ்திரம் இல்லை; ஸ்திரமான நம்பிக்கையில்லை; முன்னோக்கி ஏற்படும் அநுமானமில்லை; பின் வருவதைச் சொல்லும் திறமுமில்லை; மனித அநுபவம் பிரயோஜனமற்றுப் போம்; மனிதன்வாழ்க்கையும் ஒழுங்கின்மையான குழப்பமாக முடியும்.

(4) "மனிதன் எதை விதைக்கிறானோ அதை அறுப்பான்," இதுதான் கர்மவிதி என்பது. நெல் வேண்டுவோன் நெல் விதைக்க வேண்டும். திராக்ஷக்கொடியை நட்டு அதினின்று ரோஜாப் புஷ்பத்தை யெதிர்பார்த்தல் வீணே. முள் விதை விதைத்து அதினின்று கோதுமை அரிசியைப்பெற முயலுவது வீணே. நீதிமுறை

மாநசிக பூமியிலும் நியாயம் கொஞ்சமேனும் தடுமாறாது. சோம்பல் விதைவிதைத்து கல்வி என்ற பலனை அடைய நினைப்பதும், அஜாக்கிரதை என்ற விதையை விதைத்து விவேகம் என்ற பலனையடையக் கருதுவதும், சுயநன்மை என்ற விதையை விதைத்து அன்பு என்ற பயனை எதிர்பார்ப்பதும், பயத்தை விதைத்து தைரிய சம்பத்தையடைய நோக்குதலும், வீணே. ஞானமும் உண்மையும் அமைந்த இந்த உபதேசமானது தெரிவிக்கிறதென்னவென்றால், ஒவ்வொரு மனிதனும் தினந்தோறும் அவன்கொள்ளும் ஆசைகளையும், எண்ணங்களையும், செய்கைகளையும் சிந்தித்து ஆராய வேண்டும்; அவைகளாற் சம்பவிக்கும் பலன்களை அறியவேண்டும்; செய்வினையின் பலனை அனுபவித்தே தீரவேண்டும்; மன்னிப்பு என்பது பிரபஞ்ச தர்மத்தில் இல்லை. ஒருவன்செய்ய, மாற்றான் பலனை அனுபவித்தல், நம்முயற்சியின்றி ஈசுவர கிருபை (Divine mercy) உண்டாதல், இவைபோன்ற பிராந்தியான எண்ணங்களை விட்டொழிமின். இத்தப்பான அறிவீனமான எண்ணத்தினால் மோசம்போகன்மின். இவ்விதமான தப்பான அபிப்பிராயங்களைக் கொண்டு கடவுளையேமாற்ற முடியாது. அவனவன் குற்றங்களை அவனவன் முயற்சியால் நீக்கவேண்டும். "எவன் எதை விதைக்கிறானோ அவன் அதை அறுப்பான்" என்ற உத்தம வாக்கியங்கள், உண்மையை வற்புறுத்திப் பறையடிக்கின்றன. இதுவே நீதிமுறையான எச்சரிக்கை. இதுவே ஆறுதலையும் தைரியத்தையும் அளிக்கும் நன்மொழி. பிரஞ்ஞா பூமியிலும், நடுநிலைமை குன்றாத சத்தியம் நிகழ்ந்தால் தான், நாம் நம்முடைய சீலத்தையும், ஒழுக்கத்தையும் சீர்ப்படுத்திக்கொள்ளல் கூடும். சங்கல்பமானது குணத்தையும், குணமானது சீலத்தையும் உண்டுபண்ணும். 'மனிதன் எவ்விதம் நினைக்கிறானோ அவ்விதமாகிறான், நினைப்புக்கேற்பவேசீலம்; மனிதன் சங்கற்பத்தினால் சிருஷ்டி பெறுகிறான். மனிதனின் நினைப்பு எதில் நிற்கின்றதோ அதுவாக ஆகிறான். தைரியத்தின் மீது சிந்தனை கொண்டால், நம்முடைய ஒழுக்கமுறையில் தைரிய சம்பத்து அமையும். அவ்விதமே பரிசுத்தம், பொறுமை, பிறர் நயம் பேணுதல், தன்மை அடக்கல் இவைமுதலிய தெய்வ சம்பத்தும் நம்மிடத்தில் அமையும்படி செய்தல் கூடும். திடமான தளராத உறுதிப்பாடுள்ள சித்த

விருத்தியானது மனத்தில் வியக்தமான பழக்கத்தை யுண்டுபண்ணும். அப்பழக்கமானது நம்மொழுக்க முறையில் ஒரு குணமாக விகாசம் பெறும். கொத்தன் ஒரு சுவரைக்கட்டுவதுபோல், அவ்வளவு நிச்சயமாய் நம்முடைய ஒழுக்கம் நீதி முறையில் நடைபெறும்படி செய்துகொள்ளலாம். சீலமானது விதிவசத்தில் மிகவும் பலன் தரும் அம்சமாம். நாம் ஒரு ஜன்மத்தில் மேன்மையான சீலத்தை அபிவிர்த்தி செய்தால், மறு ஜன்மத்தில் ஜனங்களுக்கு உபகாரியாகவும் சத்கைங்கரியங்கள் செய்பவனாகவும் ஆவோம். நடுநிலைமையற்றிய கர்மவிதியினால், கஷ்டமடைவதுபோல், அதின்மூலமாய் ஜயத்தை யுமடையலாம். கர்மவிதியின் நீதிமுறை தெரியாமையால், சுக்கானில்லாத படகு வெள்ளத்தினால் இழுக்கப்பட்டு நாசம் அடைதல் போல, நம்முடைய கதியும் முடியும். கர்மவிதியின் முறையை அறிந்தால், நாம் ஒரு சுக்கானை அடைந்ததாக ஏற்படும். அதன் ஆதரவால் இஷ்டப்படும் மார்க்கங்களில் நம்முடைய படகை அதாவது உலக வாழ்வைத் தைரியமாகச் செலுத்தல் கூடும்.

ஓம் தத் சத்.

வி- வெங்குஸ்வாமிஐயர்.

(ஸ்ரீமது அந்நியபீஸண்டு அம்மையார் வியாசம்-Theosophist May 1910.)

---

## நன்மொழிகள்.

9. யாதேனும் ஒரு நற்கருமத்தைச் செய்யவே இச்சரீரம் எடுத்தோம், வீணுக்கன்று. காலம், தேசம், வர்த்தமானம் இவைகளை அறியவேண்டும். இடம், பொருள், ஏவல், நமக்குரிய சக்தி இன்னதென்று உணரவேண்டும். ஒவ்வொருவனும் தன்னைப் பரிசுத்தம் செய்துகொள்ளவேண்டும். முதலில்:—

(1) அன்னமய சரீர சுத்தம்.— அதாவது, கண்ட உணவை நாடாமல், நுகராமல், நம்தொழிலுக்கேற்ப சுத்தமான சாத்விக உணவைக் கொள்ள வேண்டும். அப்படிச் செய்துவர, ஸ்தூல சரீரம் நம் வசமாகும்.

(2) பிராண சரீர சுத்தம்: அதாவது, பிராணனைக் கண்டபடி விடாமல், விதிக்குட்படுத்த முயலவேண்டும்.

# பகவத்கீதையும் கருமயோகமும்.

———o———

1. இவ்வுலகத்தில் வழங்கிவரும் சாஸ்திரங்களையும் அவைகளுடையதாத்பரியத்தையும் தீர்க்கமாய்விசாரித்து, நன்குணர்ந்து, நாம் குணம், சரிதை, ஞானம், இவைகளில் மேன்மேலும்அபிவிர்த்தியையடையும் வண்ணம் அப்பியசிக்கலாம். அல்லது அவைகளினுடைய தாத்பரியத்தை நன்கறியாமல் விபரீதமாகக்கைக்கொண்டு மேற்சொல்லியதற்கு விரோதமான பயனையடையலாம். ஓர் ஆகாரமானது திடமான தேகவலியை யுடையவனுக்கு பலத்தையும், சௌக்கியத்தையும் கொடுத்தும், தேகவலிகுன்றின ஒரு வியாதியஸ்தனுக்கு அவனுடைய வியாதியை அதிகரிப்பிக்கும் தன்மையையும் நாம் நம்முடைய அநுபோகத்தில் பார்த்திருக்கின்றோம். ஞான சாஸ்திரத்தின் பயிற்சியால் நன்மையை அடைவதும் அடையாததும் அவன் மநோநிலையைப் பொருத்ததாகவிருக்கிறது. இதுகாரணம்பற்றியே, வெளிப்படை வேதாந்திகளுக்கும் பாகவதர்களுக்கும் சிறுபான்மை பழிப்பும் குறைவும் உலகவதந்தியில் இருக்கின்றன. இவ்வுலகத்தில் நன்மையில் தீங்கு உள்ளது.

ஸர்வாரம்பா ஹி தோஷேண தூமேநாக்நிரிவாவ்ருதா:

நெருப்பானது புகையினாலேயும் கண்ணாடியானது அழுக்கினாலேயும் மூடப்பட்டிருக்கின்றன. நெருப்பின் குணம் வெளிச்சமும் புகையின்குணம் இருட்டுமாக ஏற்படுகின்றன. நெருப்பிலே அதற்கு விரோதமான குணத்தை அவலம்பித்திருக்கிற புகையை எப்படி நாம் பார்க்கலாமோ, அதுபோலவே ஸத்தியமார்க்கத்தைக் காட்டுகின்ற சாஸ்திரத்திலேயே நம்முடைய விபரீதபுத்திக்கு ஏற்றபடி, அதற்கு விரோதமான வழியைத்தேடி நாம்அநுஷ்டிக்கலாம். கீதையானது, உலகத்திற்கு ஹிதத்தை நாடும் பலமுயற்சிகளுக்கு ஆதாரமாகிய உத்தமமான நிஷ்காம கருமயோகத்தை மேன்மையான உபதேசமாகக் கற்பிக்கிறது. இதற்கு மாறாக, அவ்விதமுயற்சிகளுக்கும் யாதொரு சம்பந்தமும் இல்லாதது போலவும், அம்முயற்சிகள் பிரவிர்த்திமார்க்கத்திற்குச்சேர்ந்தவைகள்என்றும், எண்ணி முயற்சிகளை

இழிவாக மதித்தும், தியானம், பக்தி, ஞானம் இவைகளை மாத்திரம் உயர்வாக நினைத்தும், அதற்குத்தக்கபடி நம்மவர்கள்நடந்துவருகிருர்கள். ஆகையால் முயற்சிகளில், ஸாத்விகமானமுயற்சிக்குத்தக்கஉத்ஸாகத்தைக்கொடுக்கக்கூடிய இந்த கீதா சாஸ்திரமானது இருள்போன்ற தாமஸகுணத்தை உண்டுபண்ணத்தக்கதாய்க் கருதி அக்கருத்துக்கிணங்க நம்மவர்கள்நடைபெறுகிருர்கள் இவ்விதமாக கீதையின் அர்த்தங்களை முயற்சியின்மைக்கு ஒத்தமாதிரியாக உட்கொண்டுஅப்பியஸித்து வருவதால்,வேதாந்தசாஸ்திரத்தைக் கற்ற சிலர்கள் உலகத்திற்கு ஹிதமான செய்கைகளைச்செய்யாமல், தத்துவ வாதங்களில் ரமிக்கிறவர்களாயிருந்துகொண்டு, பேச்சுமிகுதியால் காரியக்குறைவு உள்ளவர்களாய், அதனுல் அவர்கள் அப்பியஸிக்கும் சாஸ்திரத்திற்கு ஒரு குறைவையும் உண்டுபண்ணுகிருர்கள். ஆனல் வேதாந்த சாஸ்திரமானது மற்றெல்லா சாஸ்திரங்களைக்காட்டிலும் நன்முயற்சிக்கு வேண்டிய ஆதரவைக்கொடுக்கத்தக்கது.

2. கீதையானது, பகவானுல் முயற்சியில் ராஜஸ முயற்சியைத் தன்னுடைய வர்ணத்தின் தர்மமாகக்கைக்கொண்ட அர்ச்சுனனுக்குச் சொல்லப்பட்டதே தவிர, உலகத்தைத்துறந்து வனத்தில் தபசுசெய்யும் துறவிகளுக்குச்சொல்லப்பட்டதன்று. அர்ச்சுனன் பாண்டவர்களுக்குள் சிரேஷ்டன். மற்றவர்களைக்காட்டிலும் பிரவிர்த்திக்கும் நிவிர்த்திக்கும் உள்ளசமத்வத்தை (balance) அடைந்து, பகவான் கீதையை உபதேசிக்கும் காலத்தில், அவனுடைய ஜாதியின்பிரதானமான முயற்சியாகிய யுத்தத்தை ஆரம்பிக்கிற தருணத்தில் நின்ருன். அந்தக்காலத்தில் அவன் தன் தர்மத்தில் மயக்கங்கொண்டு, தம்முயற்சியிலிருந்து நழுவுகிறசமயமாயிருந்தது. அப்போதுஅவனை அந்த கோரமான முயற்சியில் ஸ்திரப்படுத்துவதற்காக இந்த சாஸ்திரம் உபதேசிக்கப்பட்டபடியால், அதே மாதிரி இந்த சாஸ்திரத்தைக்கற்கும் பலர்கள் அவரவர்கள் கருமங்களுக்கும் குணங்களுக்கும் ஏற்ற தொழில்களைச் செய்துவருவதில் அவைகளை தருமத்துக்கு விரோதமின்றியும், யாதொரு தாழ்வின்றியும், செய்துவருவதற்கு கீதையின் வசனங்கள் உபயோகப்படுத்தத்தக்கன. ஒருவனை அவனுடைய முயற்சியினின்று விலகும்படி செய்யவாவது, அவனுடைய ஊக்க

த்தையும் விடாமுயற்சியையும் குறைக்கவாவது, அவ்வசநங்கள் ஏற்பட்டனவல்ல.

𑌨 𑌹𑌿 𑌕𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌕𑍍𑌷𑌣𑌮𑌪𑌿 𑌜𑌾𑌤𑍁 𑌤𑌿𑌷𑍍𑌠𑌤𑍍𑌯𑌕𑌰𑍍𑌮𑌕𑍃𑌤𑍍
𑌕𑌾𑌰𑍍𑌯𑌤𑍇 𑌹𑍍𑌯𑌵𑌶𑌃 𑌕𑌰𑍍𑌮 𑌸𑌰𑍍𑌵𑌃 𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿𑌜𑍈𑌰𑍍𑌗𑍁𑌣𑍈𑌃

ஒருகாலத்திலும் ஒருநிமிஷமாவது ஒருவன் கர்மத்தைச் செய்யாதவனாக இருக்கிறதில்லை. எல்லோரும் அவரவர்களுடைய சுபாவமான குணங்களினாலே கட்டுப்பட்டவர்களாய்க் கர்மத்தைச்செய்கிறார்கள். (கீதை iii 5.)

ஆகையால் ஒவ்வொருவனும் கர்மத்தைச் செய்யவேண்டியது அவசியமாக ஏற்படுகிறது. மேலும்,

𑌕𑌰𑍍𑌮𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌾𑌣𑌿 𑌸𑌂𑌯𑌮𑍍𑌯 𑌯 𑌆𑌸𑍍𑌤𑍇 𑌮𑌨𑌸𑌾 𑌸𑍍𑌮𑌰𑌨𑍍
𑌇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌾𑌰𑍍𑌥𑌾𑌨𑍍𑌵𑌿𑌮𑍂𑌢𑌾𑌤𑍍𑌮𑌾 𑌮𑌿𑌥𑍍𑌯𑌾𑌚𑌾𑌰𑌃 𑌸 𑌉𑌚𑍍𑌯𑌤𑍇

எவன் கர்மேந்திரியங்களை அடக்கி மனத்தினாலே விஷயங்களை ஸ்மரித்துக்கொண்டிருக்கிறானோ அந்தமூடன் கள்ளாசாரமுடையவனாகச் சொல்லப்படுகிறான். (கீதை iii 6)

ஆகையால் அப்பேர்ப்பட்டவன் கர்மத்திலிருந்து தப்புவதற்கு ஹேதுவின்றி வேஷதாரிபோல் நடந்துகொள்ளுகிறான்: தவிரவும் ஒவ்வொருவனும் அவனவன் சரீரத்தைப்பாதுகாப்பது தர்மமாக ஏற்பட்டு இருக்கிறபடியால் கருமஞ்செய்யாவிடின், அந்த தர்மம் நடத்தக்கூடாமற் போய்விடுமன்றோ?

𑌨𑌿𑌯𑌤𑌂 𑌕𑍁𑌰𑍁 𑌕𑌰𑍍𑌮 𑌤𑍍𑌵𑌂 𑌕𑌰𑍍𑌮 𑌜𑍍𑌯𑌾𑌯𑍋 𑌹𑍍𑌯𑌕𑌰𑍍𑌮𑌣𑌃
𑌶𑌰𑍀𑌰𑌯𑌾𑌤𑍍𑌰𑌾𑌪𑌿 𑌚 𑌤𑍇 𑌨 𑌪𑍍𑌰𑌸𑌿𑌦𑍍𑌧𑍍𑌯𑍇𑌦𑌕𑌰𑍍𑌮𑌣𑌃

ஏற்பட்டகர்மத்தை நீ செய். கர்மம் செய்யாததைக்காட்டிலும் கர்மம் செய்வது சிரேஷ்டம். கர்மம் செய்யாமலிருப்பதினால் சரீர சம்ரக்ஷணையும்கூட நிறைவேறாது. (கீதை iii 8)

(இன்னும் வரும்.)

அ. ரங்கஸ்வாமி அய்யர்.

# சங்கீதம்—அதன் உயர்வும் தாழ்வும்.

1. உலகத்தில் மானிடப்பிறவியானது சுகம் துக்கம் என்னும் இருவித விகாரங்களினால் பாதிக்கப்படுவதையும், ஒவ்வொரு பிராணியும் துக்கத்தை அகற்றி சுகத்தையே அடைய முயல்வதையும், நாம் நன்கு அறிந்திருக்கின்றோம். சுகதுக்கங்களின் பரிமாண மட்டும் அந்தந்தப்பிராணிகளின் மந இயல்புக்கும் அப்பியாசத்துக்கும் தக்கபடி வேறுபடினும், சுகத்தில் நாட்டமும் துக்கத்தில் வெறுப்பும் எல்லாப்பிராணிகளுக்கும் சாமாந்யமாக அமைந்திருக்கின்றன. ஆயினும் சுகமென்பது என்ன? துக்கமென்பது என்ன? என்று உய்த்துணர்ந்து ஆராயுங்கால், உண்மை உணர்ந்த மேதாவிகள் பஞ்ச இந்திரியங்கள் மூலமாய் மநத்துக்கும், விஷயமாகின்ற பொருளுக்கும் உண்டாகும சம்பந்தமே, நாம் பாராட்டும் சுகத்துக்கும் துக்கத்துக்கும் காரணமென்றும், அச்சம்பந்தம் ஒழிந்த நிலையில் ஒவ்வொரு பிராணியும் சுகரூபமாகவேயிருக்கின்றதுஎன்றும், விளம்புவதுமன்றி அந்தச் சுகத்தை நிர்விஷய சுகமென்றும், அது வேறுபாடற்றது என்றும், ஆனால் அநுபவத்தில் சுகமென்றும் துக்கமென்றும் யாம் கருதும் இருவித உணர்ச்சிகளும் சவிஷயங்களென்றும், வாதிக்கின்றார்கள். அந்த நிர்விஷய சுகமேதான் பேரானந்தமென்று நம் நாட்டிலுள்ள எல்லாச் சமயவாதிகளும் கொண்டாடும் பெரிய பேருக இருக்கின்றது. சவிஷயமான த்வந்த்வங்களாகிய சுக துக்கத்தில் அழுந்தி உழலும் பிராணிகளுக்கு, அத் த்வந்த்வங்கள் விலகி தந்தம்இயற்கைநிலையாகிய நிர்விஷய ஆனந்தத்தை சுவாநுபூதியால் உணர்ந்து அந்நிலைவிட்டு அகலாது நிற்கும் பான்மையே வீட்டுப்பேறு எனச் சமயவாதிகள் அனைவோரும் ஒன்றுபடக் கூறுகின்றனர். அந்தப் பேரானந்தமே, நிலநலத்தின் வேறுபாட்டினால் குணத்தின் வேறுபாட்டை யடைகின்ற நீர்த்துளிகளை ஒப்பவும், கண்ணாடிகளின் வர்ணங்களுக்குத் தக்கவாறு வெவ்வேறு வர்ணத்தைத் தரிக்கின்ற விளக்கொளியை ஒப்பவும், பிராணிகளின் பஞ்சகோசங்களினால் வேறுபடும் அந்தக்கரண விருத்திகளுக்குத் தக்கவாறு வேறுபட்டும் நிற்கின்றது. ஆகவே விஷய சுகத்தையும் அப் பரமாநந்தத்தின் ஓர் துளியெனப்பெரியோர்கள்கைக்கொண்டிருக்கிறார்கள். அஃதாவது:—

ஸ்வரூபானந்தஸ்யைவ ஸ்ரக்சந்தனாதிவிஷயஸம்பர்கஜந்யாந்த:
கரணவ்ருத்திஷு ப்ரதிபிம்பிதஸ்ய விஷயானந்தஶப்தேந வ்யவ
ஹ்ரியமாணத்வேந ஸ்வரூபானந்தவிஷயானந்தயோர்பேதாபா
வாத் அந்த:கரணவ்ருத்திநிஷ்டஜந்யத்வவிநாஶித்வயோர்தர்மயோ:
வ்ருத்திப்ரதிபிம்பிதஸ்வரூபானந்தே ஆரோபணாத்
விஷயதாரதம்யேந வ்ருத்திதாரதம்யாத் வ்ருத்திதாரதம்யேந வ்ரு
த்திப்ரதிபிம்பிதஸ்வரூபானந்தே தாரதம்யப்ரதீதே:
ஸ்வரூபானந்தே விஷயானந்தஸ்யாம்ஶத்வம்

என்பது சாஸ்திரத்தின்கருத்து.

இதன் பொருள்—மாலை சந்தன முதலிய விஷய சம்பந்தத்தினுல் உண்டாகிற அந்தக்கரண விருத்திகளில் பிரதிபிம்பிக்கிற ஸ்வரூபாநந்தத்துக்கே விஷயாநந்தமென்று வியவகாரநாமம் ஏற்பட்டிருப்பதால், சொரூபாநந்தத்துக்கும் விஷயாநந்தத்துக்கும் பேதமில்லாமையாலும், அந்தக்கரண விருத்தியில் இயற்கையாய் உண்டாகுதல் அழிதல் என்னும் இரண்டு தர்மங்களாலும், விருத்தியில் பிரதிபிம்பிக்கின்ற சொரூபாநந்தத்தின்பேரில் ஆரோபிக்கப்படுவதாலும், விஷய தாரதம்யத்தினுலே விருத்தி தாரதம்மியமும், விருத்தி தாரதம்மியத்தினுலே விருத்தியில் பிரதிபிம்பிக்கின்ற சொரூபானந்தத்தில் தாரதம்மிய தோற்றமும் உண்டாவதாலும், விஷயானந்தமானது சொரூபாநந்தத்தின் ஒரு துளியாகும். உண்டாகி அழிந்துகொண்டிருக்கும் விஷயாநந்தத்தை நாடி அடையும் பலன் சீக்கிரத்தில் அழியக்கூடியதாகையால், இயன்றவாறு சொரூபானந்தத்தை உணர்ந்து அநுபவிக்க முயல்வதே மேம்பாடுடையதென்பது ஆன்றோர்களின் கொள்கை.

2. பிராணிகளின் பஞ்ச கோசங்களில் முதற் கோசமாகிய ஆனந்தமய கோசமானது சொரூபானந்தத்தின் திரட்சி என்றும் அதை அவயவமாகப் பிரித்து ஆராய்ந்து

தஸ்ய ப்ரியமேவ ஶிர:।
மோதோ தக்ஷிண: பக்ஷ: ப்ரமோத உத்தர: பக்ஷ:
ஆநந்த ஆத்மா ப்ரஹ்ம புச்சம் ப்ரதிஷ்டா

என்று உபநிஷத்து கூறியிருக்கின்றது.

இதன்பொருள்.- இதற்குப்பிரியம்தான் தலை. சந்தோஷம் வல இறக்கை. மகாசந்தோஷம் மற்றொரு இறக்கை. இதற்கானந்தமே ஆத்மா. பிர்ம்மமே இதற்கு ஆதாரமான வால் என்பதாகும். பிரகிருதியின் காரியமாகிய முக்குணங்களின் பான்மையால் இந்தச் சொரூபானந்தமானது மும்முறையாக மானிடர்களின் அனுபவத்துக்குச்சாத்தியமாகும். அப்படிச்சாத்தியமாகும்போது, விஷயசம்பந்தமும் அந்தக்கரணவிருத்திகளும் ஒழிந்துவிடும். அம்மும்முறைகளில் சமாதியானது சாத்வீககுணமுறையாகும். சங்கீதமானது ரஜோகுணமுறையாகும். எல்லாப் பிராணிகளுக்கும் இயற்கையான சுஷுப்தியானது தமோகுணமுறையாகும். சமாதியில் கர்த்திருத்வம் ஒழிந்து ஞானமட்டும்பெருகிநிற்கின்றது. சுஷுப்தியில் கர்த்திருத்வமும் ஞானமும் ஒழிந்து அஞ்ஞானமாகிய அந்தகாரமே பெருகிநிற்கின்றது. சங்கீதத்தில் கர்த்திருத்வமும் ஞானமும் கலந்துநிற்கின்றது. இம்மும்முறைகளின் தாரதம்யத்திற்கு உதாரணம். தாயைக் கூவிநிற்கும் குழந்தை தாயைக்கண்டு அவளால் வாரியணைத்து இடுப்பிலெடுத்துக் கொள்ளப்படும்பொழுது, தன்னிலைமறந்து தாயால் அணையப்பெற்ற ஆனந்தத்தில் மூழ்கி நிற்பது சமாதிக் குவமையாகும். அப்பொழுது தன்னிலை மறவாது தாயுடன் குலாவி நிற்பது கானத்திற்குவமை. தாயால் வாரியணைக்கப்பெறினும், தாயைப் பார்க்க விழியில்லாமலும் தாயென்றுணர அறிவில்லாமலும் ஜடம் போல் நிற்பது சுஷுப்திக்குவமை. ஆகவே சமாதி என்னும் பதம் ஸம்+ஆ என்னும் உபசர்க்கங்களுடன் யா என்னும் தாதுவினால் அமையப்பெற்றது. அந்த தாதுவிற்கு சேர்த்து ஒன்றாகக்கோள்ளல் என்பது பொருள். சங்கீதம் என்னும் பதம் ஸம் என்னும் உபசர்க்கத்துடன் கை என்னும் தாதுவினால் அமையப்பெற்றது. அந்த தாதுவுக்கு இசையுடன் பேசுதல் என்பது பொருள் ஸுஷுப்தி: என்னும பதம் ஸு என்கிற உபசர்க்கத்துடன் ஸ்வ° சுவெப்தியின் மாறுதலாகிய ஸ்வபிதி என்னும் அசையினால் அமையப்பெற்றது. அதன்பொருள் தன்னையடைதல். அதாவது தன்னியற்கையான நிலையை அடைதல் என்பதாம். இந்த மூன்று முறைகளில் சுஷுப்தியானது எல்லாப் பிராணிகளுக்கும் பொதுவாக அமைந்துள்ளது.

சமாதி முறைபற்றி அமரும் புனிதர்கள் தம்முடைய ஆத்மஸ்வரூப மன்றி, மற்றொன்றையும உணராது, சுத்தமௌனிகளாய் தூங்காமற் றூங்கிச் சுகஉருவாய்நிற்றல் என்னும்வசனத்துக்கிணங்க, பிரபஞ்சத்தில் கலக்காமல் நிற்பவர்கள். இவர்க்கு உதாரணம் சுகர், வாமதேவர் போன்றவர்கள். இன்னோர் நிலைபெறுவதற்கு படிப்படியாய் சிரவணம்,மநநம்,நிதித்தியாஸனம்,இம்மூன்றும்விதிக்கப்பட்டுள்ளன. அதற்கடுத்த முறையாகிய சங்கீத முறைபற்றி ஆனந்திக்கும் புண்ணிய சிலர்கள் சமாதிநிலைக்கு இயற்கையான சொரூபானந்தத்தை அநுபவிக்கினும், தங்களையும்பிரபஞ்சத்தையும்மறக்காமல், தாமுணரும் ஆனந்தத்தைப்பிறருக்கும்புகட்டி, யெல்லாப்பிராணிகளுடனும் கலந்து நிற்பவர். இவருக்கு உதாரணம், நாரதர், தும்புரு, நந்திகேசுவரர், சூதர் முதலியவர்கள். இந்நிலைக்குப் படிப்படியாக சிரவணம் கானம் பிரவசநம், என்று மூன்று சாதநங்கள் விதிக்கப்பட்டுள்ளன. ஆதலாற்றான் சமாதிக்கு வேதமானது

ஶ்ரோதவ்யோ மந்தவ்யோ நிதித்யாஸிதவ்ய:

என்று சிரவணத்தையும் மநநத்தையும் நிதித்தியாஸனத்தையும் விதிக்கின்ற முறைபோல, சங்கீத சமாதிக்கு, ஶ்ருண்வந் கீர்த்தயந் கீர்த்தி ஜனாதிவாயவ:, என்று சிரவணத்தையும், கானத்தையும், கீர்த்தனத்தையும், பாகவதமானது விதித்திருக்கின்றது. (கீர்த்தி) என்றால் ஈசுவர குணங்களை எல்லோருமறியும்படி கோஷித்தல்.) இவ்வாறு மேம்பாடுடைய சங்கீதமானது மும்முறையாக உணரப்படவேண்டும். (1) Intellectual or Mathematical (2) Emotional and (3) Spiritual என பொருள்படுகின்ற (1) நியாயம் (2) போக்யம் (3) அத்தியாத்துமம் என மும்முறைகளடங்கியுள்ளன. நியாயமானது (Intellectual or mathematical) சாதாரணநாதத்தை சங்கீதமாக அமைப்பிப்பதற்கு ஏற்பட்டவிதியாகும். அது அந்தநாதத்தை பாவம், இராகம், தாளம்என மூன்று சாதனங்களுடன் அமைத்து பரதம் என்று சொல்லப்படும் நூலாக அமைந்திருக்கின்றது. இதற்குப் பரமபலன் ஆத்மக்ஷேமத்தை யடைதலாகும். கனியையளிக்கின்ற விருக்ஷமானது கனியைப் பயக்குமுன் அவாந்தரபலனை மலரின்வாசனையபப்பதுபோல, சங்கீதமானது வீட்டுப்பேற்றையளி

க்குமுன்னர், இடையில் (Emotional) போக்யமாகவும் அமைவது அதனியல்பாகும். அதாவது சரீரத்துக்கும் மநம் உள்பட அறு பொறிகளுக்கும் அனுபவிக்கும் திறமையையும் விஷயங்களுக்கு அதிகாரஸத்தையும் அளித்து உயர்ந்த போகசாதநமாக விளங்குகின்றன. ஆயினும் மலர்களைக்கசக்கி விடின், பின்னர் கனிகளும் உண்டாகாத முறையொக்க, அறம்வழுவி போகத்திற்கு மட்டும் சங்கீதத்தைச் சாதனமாகக் கைக்கொள்வோர், விட்டுப்பேற்றை யடைதலாகிய நற்கதியின்றி, பொறிகளின் வலையிற் சிக்கி, ஒழிவற்ற பிறவிக் கடலுக்கே ஆளாகி அழிவர். [இன்னும் வரும்.]

பி. எஸ். சுப்பிரமணிய அய்யர்.

---

## நன் மொழிகள்.

(3) மனச் சரீர சுத்தம்.—கண்ட காமங்களைக் கொள்ளாமல் ஆசையைத் துறக்கவேண்டும். அது நீங்கினல், குரோதம் அடங்கும். பின்னர், மற்ற துர்க்குணங்கள் விலகும். மனம் ஒடுங்க எல்லாம் வசமாகும்.

10. தானே தனக்குப் பகைவனும் நட்டானும்
தானே தனக்கு மறுமையும் இம்மையும்
தானே தான் செய்த வினைப்பயன் துய்ப்பானும்
தானே தனக்குத் தலைவனு மாமே.—திருமந்திரம்.

11. இக்காயம் நீக்கி இனிஒரு காயத்திற்
புக்குப் பிறவாமல் போம்வழி தேடுமின்
எக்காலத்து இவ்வுடல்வந்து எமக்கு ஆனது என்ற
அக்காலம் உன்ன அருள் பெறலாமே.—திருமந்திரம்.

12. இருவினை நேர் ஒப்பில் இன்னருள்சக்தி
குருவென வந்து குணம்பல நீக்கித்
தருமெனும் ஞானத்தால் தன்செயல் அற்றால்
திரிமலம் தீர்ந்து சிவன் அவன் ஆமே.—திருமந்திரம்.

13. சத்தியை வேண்டிச் சமயத்தோர் கள்ளுண்பர்
சத்தி அழிந்தது தன்னை மறத்தலால்
சத்தி சிவஞானம் தன்னில் தலைப்பட்டு
சத்திய ஞான னந்தத்திற் சார்தலே.—திருமந்திரம்.

---

ஓம் ஸ்ரீ குருப்யோ நம꞉

# அவதாரங்களின், முக்கியமாய்ப் பரசுராம அவதாரத்தின் உண்மை.*

ஈசுவரனின் ரூபம், குணம், மஹிமையை வெளிப்படையாகக் காட்டும் அவதாரங்கள் அல்லது விபூதிகள் கணக்கில் அடங்கா, வரம்புக்குட்படா.

விஷ்ணோர்நு வீர்யகணநாம் கதமோர்ஹதீஹ,
ய꞉ பார்திவாந்யபி கவிர்விமமே ரஜாம்ஸி,
சஸ்கம்ப ய꞉ ஸ்வரம்ஹஸாஸ்கலதா த்ரிப்ருஷ்டம்,
யஸ்மாத் த்ரிஸாம்யஸதநாதுருகம்பயாநம் ॥

(ஸ்ரீமத் பாகவதத்தில் 2-வது ஸ்கந்தம், 7-ம் அத்தியாயம்) இதன் அர்த்தத்தையே இருக்குவேதததில் மந்திரரூபமாக, சொல்லியிருக்கிறது:—

விஷ்ணோர்நுகம் வீர்யாணி ப்ரவோசம் ய꞉
பார்திவாநி விமமே ரஜாம்ஸி ॥

இதன்பொருள். பூமியின்கண் உள்ள தூளிகளை எண்ணினாலும் எண்ணலாம், விஷ்ணுவின் மஹிமைகளைச் சொல்லமுடியாது. கீதாசாஸ்திரத்திலும்—

" நாந்தோஸ்தி மம திவ்யாநாம் விபூதீநாம் பரந்தப."

இதன் பொருள். " என் திவ்ய விபூதிகளுக்கு எல்லைதான் பார்க்குமளவில் இல்லை. பரந்தபனே " என்றும்:—

" விஷ்டப்யாஹமிதம் க்ருத்ஸ்நமேகாம்ஸேந ஸ்திதோ ஜகத்" என்றும்

இதன் பொருள். என்னுடைய ஒரு அம்சத்தினால் எல்லா ஜகத்தையும் சூழ்ந்து பிரவேசித்து இருக்கிறேன். இவ்விதம் கூறியிருப்

---

* கொல்லத்தில் 1909 ௵த்தில்கூடிய பிரஹ்மஞான கிளைச்சபைகளின் பெரிய சபையில் திருவநந்தபுரம் ஹைக்கோர்டு பிரதம நியாயாதிபதியான பிரஹ்மஸ்ரீ தி. சதாசிவ ஐயரவர்களால் வாசிக்கப்பெற்றது.

பது, இக்கருத்தையே தெரிவிக்கின்றது. ஆகாசத்திற்கு தன்னுடைய எல்லையும் முடிவும் தனக்கே தெரியாது. ஸத்யம்ஜ்ஞானம் ஆநந்தம் அநந்தம் என்ற நாலுபதங்களினால் குறிக்கப்பட்ட ஈசுவரனுக்கும் ஸச்சிதாநந்தம் என்னும் மூன்று பதங்களினால் குறிக்கப்படும் ப்ரத்யகாத்மாவுக்கும், வித்தியாஸம் என்னவென்றால் நான்காம் விசேஷ பதமாகிய அனந்தம் என்பதால் ஏற்பட்டது.

2. ஆகாசத்தைப்போலவே பகவானுடைய அளவிறந்தவிபூதிகளையும் சக்திகளையும் பகவானாலேயே கணக்கிடமுடியாது. அவருக்கேமுடியாமற்போனால் வேறு யாரால்முடியும். (கூடஸ்தோவவஜநாஃ) பகவானால் தன்னுடைய சாமர்த்தியங்களை கணக்கிடவும் தன்னுடைய அநந்த கருணை முதலிய கலியாண குணங்களுக்கு எல்லை யேற்படுத்துவதற்கும் முடியாவிட்டால் அவரை, சர்வ சக்திமான் ஸர்வஜ்ஞஃ என்று எப்படி சொல்லலாமென்றாலோ, இந்த ஒருசங்கதி விஷயத்தில்மட்டும் அவருக்கு அந்த இரண்டு நாமங்களும் ஒவ்வாதென்பது நிச்சயம். அப்படியானால் நமக்கு அவரிடம் பக்தி குன்றுமே யென்றால், முயற் கொம்பு ஒருவனுக்குத் தெரியவில்லையென்றால் அவன் முட்டாளாவானா? ஒருகாலும் பாபம் செய்யமுடியாதவனை பலஹீநனென்று சொல்லலாகுமோ?

3. "ஸஹஸ்ரநிஜேவ்யதீதாநிஜநாநி" என்னும் அளவற்ற அவதாரங்களில் ஸ்ரீமத் பாகவதம் பிரதமஸ்கந்தம் 3-வது அத்தியாயத்தில் 22 அவதாரங்களை முக்கியமாக எடுத்துக்காட்டியிருக்கின்றது. இரண்டாவது ஸ்கந்தத்தில் ஏழாவது அத்தியாயத்தில் கொஞ்சம் வித்தியாசமாகவும் அதிகத் தொகையாகவும் அவதாரங்களைப்பற்றிக் கூறியிருக்கிறது. பத்தாவது ஸ்கந்தத்தில் அக்ரூரர் ஸ்துதியிலோ, பத்து அவதாரங்களை விசேஷமாகப்பிரஸ்தாபித்திருக்கிறது. கணக்கற்ற அவதாரங்களில் பத்து அவதாரங்களைமாத்திரம் எடுத்தற்குக் காரணம் வியக்தமாய்ப் புராணங்களில் சொல்லவில்லை. உலக விகாச முறையில் (Evolution) தத்துவங்கள் வெளிப்படையாய் மலரும் சோபாந முறையை சூசிப்பித்துக்காண்பிக்கும்படியாக, குறிப்பாக இப்பத்து அவதாரங்களை வேறுபடுத்திச் சொல்லியிருப்பதாக ஊகிக்கலாம்.

4. பாகவதத்தில் கூறிய பத்து அவதாரங்களாவன:—

(1) மத்ஸ்யம், (2) கூர்மம். (3) ஸ்வேதயக்ஞவராகம். (4) நரஸிம்மம். (5) வாமனம். (6) பரசுராமர். (7) தசரதராமர். (8) ஸ்ரீகிருஷ்ணன். (9) புத்தர். (10) கல்கி என்பவைகளே. வடஇந்தியாவிலும் இப்படியே வழங்குகின்றன. தென்இந்தியாவிலோ, சிலசிகித்ஸ சுலோகங்களின் ஆதாரத்தை வைத்துக்கொண்டு, எட்டாவது அவதாரமான ஸ்ரீகிருஷ்ணனுக்குப்பதிலாக பலராமரை எட்டாவதாகவும், ஒன்பதாவது அவதாரமான ஸ்ரீபுத்தபகவானை அடியோடு விலக்கிவிட்டு, தேவகிதேவியின் எட்டாவது கர்ப்பத்தில் அஷ்டமியில் ஜனித்த எட்டாவது அவதாரமான ஸ்ரீகிருஷ்ணனை ஒன்பதாவதுஅவதாரமாகவும்சிலர்ஏற்படுத்திக்கொண்டார்கள்! இதுபௌத்தர்களின்மேல்நம்மவருக்குண்டானகோபத்தினால் ஏற்பட்டதேயாம். இதுசரியன்று. ஸ்ரீபலராமமூர்த்தியைச்சேர்த்ததுபோல ஸ்ரீலக்ஷ்மணமூர்த்தியை யேன் தள்ளிவிட்டார்களோ அறியோம். இது நிற்க.

5. பத்து அவதாரங்களுக்குள் ஸ்ரீ பௌத்தாவதாரமும் ஸ்ரீ கல்கி அவதாரமும் பெரும்பாலும் முன்னது வேறுதேசங்களுக்கும் பின்னது வருகிற மன்வந்திரத்துக்கும் ஆகவேண்டிய ஜநசமரக்ஷண காரியங்களில் சம்பந்தப்பட்ட அவதாரங்களாம். ஸ்ரீகிருஷ்ணாவதாரமோ, எல்லா அவதாரங்களுடைய பிரயோஜனங்களையும் கலியுக மனிதர்களுக்காகத்திரட்டி உருட்டி வைத்த தேன்பாகுவிக்கிரகமாக ஆகிவிட்டது. ஒவ்வொரு அவதாரத்தின் மஹிமைகளையும் அர்த்தங்களையும் எழுவிதமாக விஸ்தரிக்கலாம். முதல் எட்டு அவதாரங்களின் பிரயோஜனங்களில் ஏழில் ஒன்றின் சதாம்சத்தை என்றன்னறிவுக்கு எட்டியமட்டில் முதலில் பிரஸ்தாபித்து, பின்னர் ஸ்ரீ ஜாமதக்கினிராம அவதாரமகிமையைப் பற்றித்தெரிந்த சில விஷயங்களை இதன்கண் தெரிவிக்க உத்தேசித்திருக்கிறேன்.

ஓம் தத்ஸத்

(இன்னும் வரும்)

தி. சதாசிவ அய்யர்.

# சமாசாரம்.

## பெரியகுளம் பிரஹ்மஞான சபைக்கு சென்ற ஜூன்மீ 18, 19உ களில் எழுந்தருளிய பிரஹ்மஞான சகோதரர்களான நண்பர்களது நல்வரவேற்றல்.

மஞ்சுகள் துஞ்சும் மாவரை சூழக்
கொஞ்சுங் கிளிகள் குதுகுலித் தார்ப்பக்
கிஞ்சுகப் புட்கள் கீதம் பாடக்
குயிலினங் கூவு மயிலின மகவத்
தூக்கணங் குரீஇ தூங்குகூ டிலங்க
வானுற ஓங்கி வளர்குலைத் தெங்கு
தேனுறு மாமகிழ் தீம்பலாப் பூகம்
புன்னைபா திரிபுளி பொன்பூச் சண்பகம்
மென்பூ வாகை விரிஆல் இலுப்பை
வேம்புசார் அரசு விளாநெல்லி அத்தி
நாவல் கூவிளம் நறுங்கனி வாழை
குளிர்நிழல் மருதம் கொங்குறு சாந்தொடு
பன்னருந் தருக்கள் பற்பல விளங்க,
வெண்ணகை முல்லை விரைசெறி மல்லிகை
தண்ணறு பனிநீர் தாதவிழ் கொன்றை
கண்கவர் ரோஜா கனகசம் பங்கியின்
பைந்தேன் பாய்ந்தே பைம்பொழில் பொலிய,
நந்தன வனங்கள் நாப்பட் சென்று
சிந்தை மகிழச் செய்யுஞ் சீதத்
தீம்புன லாற்றுத் தென்கரை யமர்ந்த
தேவா லயங்களும் தேர்நெடு வீதியும்
கந்தனை யனையவர் கலைதெரி கழகமும்
அரும்பெருஞ் சாலைகள் அணித்தாய் அமையப்
பெருஞ்சீர் வாய்ந்த பெரிய குளத்துப்
பிரஹ்ம ஞானப் பேரவைக் கெழுந்த
அருங்கல மன்ன அறிவுடை மக்காள்!

வருக,நும் வரவு நல்வர வாருக,
எல்லியின் கொடுமையும் இளைப்பும் முதலிய
பல்விதத் துன்பம் பாராட் டாமல்
அன்பு கூர்ந்தெம் அழைப்புக் கிசைந்தீர்.
எளியேம் நாங்கள், இயன்ற மட்டும்
செய்யுப சாரஞ் சிறிதே யாயினும்,
அன்புட னேற்று அகமிக மகிழ்மின்!
இச்சபைச் சரிதம் இயம்பக் கேண்மோ,
சாலி வாகன சகாப்த மாயிரத்
தெண்ணூற் ருரு·மாண்டிலேற் பட்டும்,
கண்ணுங் கருத்துமாய்க் காப்பவ ரின்றி
நுண்ணிய தாகி நொடித்து நிற்புழி,
வடகரைக் கதிபதி வாலறி வுடைய
எழிற்குணம் வாய்ந்த இராமபத் திரனும்,
மற்றும் சிற்சில மாண்புறு நண்பரும்,
பற்றுடன் இச்சபை பன்னீ ராண்டாய்,
ஒற்றுமை காட்டி ஓம்ப லுற்றனர்,
பின்னர் நால்வர் பெருமுயற் சியாலிக்
கழக மாளிகை காண வாய்த்தது,
அன்னவ ரெவரெனில் அறியக் கூறுவல்.
கனம்ராவ் பகதூர் கழகத் தலைவனும்,
அருணா சலமும், அலர்மேலு செட்டியும்,
சுயநயம் நீத்த சுந்தர ராஜனும்,
இன்னுஞ் சிற்சில இங்கித நண்பரும்,
இப்புக ழேற்க இடம்பெற் றனரே,
நயகுண நீதிபன் நண்பன் கிருஷ்ணனும்
பயனுள கேணி பண்பாய் எடுத்தனன்,
இச்சபைக் கியைந்த புகழ்தா னென்னே!
முச்சக மெச்சும் மூதறி வாட்டி
ஔவை நிகர்த்த அந்நிபெஸன்ட் அம்மை
கொவ்வைக் கனிவாய் திறந்து குயில்போல்,
குழலினும் இனிய கொஞ்சு மொழிகள்

கழகவாய்க் கூறிக் கற்றோர் களிக்கப்
பெற்ற புண்ணியம் பேசுதல் எளிதோ?
வாழி வாழியிம் மகாசபை வாழி!
பிரஹ்ம ஞானப் பேரவை வாழி!
வளமலி பெரிய குளமும் வாழி!
வாழி!நம் நாடு வாழி!நம் கலைகள்
வாழி! உலகுவோர் வாழி! நலமெலாம்
வாழிநம்! செங்கோல் மன்னன் வாழியே.!

எஸ். சாமிநாதையர்.

பெரியகுளத்தின் பிரஹ்மஞானசபைக்கூட்டம் :— சென்றமீ 18, 19உ களில் மதுரைஜில்லாவிலுள்ள பிரஹ்மஞானக் கிளைச்சங்கங்களின் அங்கத்தினர்கள் கூடினார்கள். மாது ஸ்ரீ அந்நிபெஸண்டு அம்மையார் ஷை சபையின் அக்கிராஸநம் வகித்தார்கள். அவர்கள் 4 உபந்நியாசங்கள் பலசமயத்தில் செய்தார்கள். பிரஹ்மஞானசபையின் பொதுவான பிரயோஜனத்தையும், கல்விப்பயிற்சி நம் தேசத்தில் அதிகமாகப்பரவவேண்டுமென்பதையும், பெண்களுக்கும் கீழான ஜாதியாருக்கும் கல்வி கற்றுக் கொடாத தோஷத்தால் இத்தேசத்திற்குக் குறைவு நேரிட்டிருக்கிறதென்பதையும், சமீபத்தில்உலகரக்ஷகர் அவதாரமாவாரென்பதையும், பின்னும் அநேக விஷயங்களைப்பற்றியும், விஸ்தாரமாக உபந்நியசித்தார்கள்.

17உ வெள்ளிக்கிழமை சாயங்காலம் மாதுஸ்ரீ அந்நிபெஸண்டு அம்மையாா பெரியகுளத்துக்கு விஜயம் செய்தார்கள். அவர்கள் ஜாகையில் சற்றுநேரம் இளைப்பாறி, பின்பு பெரிய குதிரைவண்டியில் அம்மையார் ஏறிக்கொண்டு, அவ்வண்டி மகா-ா-ா-ஸ்ரீ ஜமீந்தார் ராமபத்திரநாயக்கர் அவர்கள் தம்மரண்மனைக்கு ஓட்டிக்கொண்டுபோக, மேளதாளத்துடனே வெகுஜனங்கள் கூடி ஊர்கோலம் நடந்தது. அரண்மனையில் பெரிய சபை கூடியது. கீர்வாண கலாஅபிவிருத்தி சபையார்களுக்காக மகா-ா-ா-ஸ்ரீ சீதாராம அய்யர் அவர்கள் ஒரு நல்வரவுப் பத்திரமும் (Address) ஊரார்களுக்காக மகா-ா-ா-ஸ்ரீ முனிசிபு கிருஷ்ணஸ்வாமிநாயுடு அவர்கள் ஒரு நல்வர

வுப்பத்திரமும் வாசித்தார்கள். அவைகளுக்கு உத்தரமாக விஸ்தாரமான உபந்யாசம் அம்மையார் செய்தார்கள். பின்பு வழக்கமான ஹாரம் முதலிய மரியாதைகள் செய்யப்பெற்று, அம்மையார் கிட்ஸன் விளக்குகளுடன் தம்முடைய ஜாகைக்கு ஷை வண்டியிலேயே, ஊர்கோலமாகச் சென்றார்கள்.

18௳ சனிக்கிழமை காலையில், ஷை பெரியகுளம் பிரஹ்மஞான கிளைச்சபையின் அக்கிராஸநாதிபதி மகா-௱-௱-ஸ்ரீ கனம் தங்கிய ராமபத்திரநாயக்கர் அவர்கள் நல்வரவு அழைப்புப்பத்திரம் வாசித்தார்கள். பின்பு ஸ்ரீ அம்மையாருடைய உபந்யாசம் நடந்தது.

மாலை $1\frac{1}{2}$-மணி முதல் 2-மணி வரை, பிரஹ்மஞான சபையைச் சார்ந்த அங்கத்தினர்க்கு மாத்திரம் மாதுஸ்ரீ அம்மையார் உபந்யாசம் செய்தார்கள்.

மாலை $3\frac{1}{2}$மணி முதல் $4\frac{1}{2}$மணி வரை, பிரச்னோத்திர சம்பாஷணை நடந்தது. மாதுஸ்ரீ அம்மையார் அநேககேள்விகளுக்கு விடை கொடுத்தார்கள்.

மாலை $4\frac{1}{2}$ முதல் 5-20 வரை, "கல்விப்பயிற்சி முறையை" ப் பற்றி ஆங்கிலத்தில் மகா-௱-௱-ஸ்ரீ வி. ராமச்சந்திர அய்யர் அவர்கள் உபந்யாசமும் "அடுத்து சமீபமான வருங்காலத்தைப்" பற்றி எனங்குடி மகா-௱-௱-ஸ்ரீ வி. ராமச்சந்திரநாயக்கர் அவர்களின் தமிழ் உபந்யாசமும் நடைபெற்றன.

5-30-மணிக்கு மாட்சிமை தங்கிய விக்டோரியா மஹாராணி அவர்களின் ஞாபகச்சின்னமாக ஏற்படுத்தியுள்ள நூதன ஆங்கில வித்தியாசாலைக் கட்டிடத்தின் கிரகப்பிரவேச உற்சவம் நடந்தது. ஊரில் உள்ள அநேககனதனவான்கள் கூடினார்கள். மாதுஸ்ரீ அந்நி பெஸண்டு அம்மையார் அக்கிராஸனம் வகித்தார்கள். இக்கட்டிடம் மகா-௱-௱-ஸ்ரீ கனந்தங்கிய ஜமீந்தார் ராமபத்திரநாயக்கர் அவர்களின் பொருள் உதவியாலும் விடாமுயற்சியாலும் ஏற்பட்டது. கல்விப் பயிற்சியில் அபிமானமுள்ளயாவரும் இவர்களுக்கு நன்றிபாராட்டக் கடவர்கள். இவர்கள் செல்வத்தை விதரணையாகவும், இக்காலத்தின் குறிக்குஏற்பவும், புத்திசாலித்தனமாகச் செலவழித்து வருகின்றார்

கள். இவர்கள் மேன்மேலும் இத்தகைய தர்மங்களைச் செய்து கொண்டு நீடூழி வாழ்க.

வித்தியாதானத்தைப் பற்றியும், ஜமீந்தார் அவர்களின் அருமை பெருமையான குணங்களைப்பற்றியும், கொடையைப்பற்றியும், அம்மாள் விஸ்தாரமாகச் சொன்னார்கள். அவரே எல்லாப் புண்ணியத்தையும் அடையாமல், இதராளும் அவர்போல் முன்வந்து நற்காரியங்கள் செய்யவேண்டும் எனபதாகச்சொல்லி தம்முபந்நியாசத்தை முடித்தார்கள்.

19௳ ஞாயிற்றுக்கிழமைகாலையில் 8மணிக்கு மகா-ஙா-ஙா-ஸ்ரீமுன்சிபு கிருஷ்ணஸ்வாமிநாயக்கர்அவர்கள் பிரஹ்மஞான சபையைச்சேர்ந்த தோட்டத்தில் கெட்டியாகக்கட்டியிருக்கிற ஓர்கிணற்றுக்கு'பிஸன்டேகிணறு'எனப்பெயரிட்டு அதை அம்மாளே முதல்முதல்ஒருதோண்டி ஜலம் எடுக்கும்படிசெய்து அதனல் அக்கிணற்றைப் புநிதமாகும்படி செய்வித்தார். பெரியகுளத்தின்பிரஹ்மஞானக்கிளைச்சபையால்நடத்தப்படும் பெண்பாடசாலையின் வருஷோற்சவம் நடந்தது. மாதுஸ்ரீ அம்மையார் அக்கிராஸனம் வகித்தார்கள். குழந்தைகள் சம்ஸ்கிருத சுலோகங்களைப்பாடினர்கள். கோலாட்டம் முதலான வேடிக்கைகள் செய்தார்கள். குழந்தைகளுக்குப்பரிசுகள் கொடுக்கப்பட்டன. பின்பு பெண்கல்வியைப்பற்றி விஸ்தாரமாக மாதுஸ்ரீ அம்மையார் பேசினர்கள். நம்தேசத்தில் உயர்நலம் அமைந்த பாவங்களை லக்ஷ்மி, சரஸ்வதி, பார்வதி தேவிகளின் புராணங்களாலும், ஸ்திரீ உத்தமிகளான சிதை,சாவித்திரி, மைத்திரேயி, நளாயினி, தமயந்திமுதலியவர்களின் சரித்திரங்களாலும் அறிந்து, அறிந்தபடி ஒழுகும்படியாக நம்பெண்களுக்கு கல்வியைக்கற்பித்தல் மிகவும் முக்கியமென அம்மையார் சொன்னர்கள்.

1-மணிமுதல் 2-மணி வரை பிரஹ்மஞான சபையாரின் காரியங்களைப்பற்றிய ஆலோசனை நடந்தது.

3-30 முதல் 5-மணிவரையில், மகா-ஙா-ஙா-ஸ்ரீ அ. ரங்கசாமிஅய்யர் அவர்கள் பிரஹ்மஞான சபையார் செய்யவேண்டிய முயற்சிகளைப்பற்றி ஆங்கிலத்திலும், பிரஹ்மஸ்ரீ ப. நாராயணஅய்யரவர்கள்

"சுகிர்தம் பயக்கும் வாழ்நாள் முறையை" ப்பற்றித் தமிழிலும் உபந்நியாசம் செய்தார்கள்.

ஷை சங்கமானது பிரயோஜனகரமாயும் திருப்தியாயும் நடந்தது. ஊராரும் உற்ஸாகத்துடன், வந்த விருந்தினரை உபசரித்தார்கள். மகா-ா-ா-ஸ்ரீ ஜமீந்தார் கனம்தங்கிய ராமபத்திரநாயக்கர் அவர்களுடைய உதாரகுணமும், மகா-ா-ா-ஸ்ரீ முன்சிபு கிருஷ்ணசாமிநாயக்கர் அவர்கள் நன்முயற்சியும், உற்ஸாகப்படுத்தும் சிலமும், முயற்சியே உருவாகக்கொண்ட ஞானசகோதரர் ஆர். சுந்தரராஜ அய்யர் அவர்களின் ஊக்கமும், பக்தியும் என்றும் சிந்திக்கற்பாலவையாம்.

இவ்வைபவங்களெல்லாம் நூதனமாகக்கட்டியிருக்கின்ற பிரஹ்ம ஞான சபை மந்திரத்தில் சிறப்பாய் நடந்தன.

* * * *

நாளது ஜூலை மீ 23, 24உ களில் கூடலூர் ஜில்லா பிரஹ்ம ஞான கிளைச்சங்கங்கள் சேர்ந்து ஒரு பெரிய சபை சிதம்பரக்ஷேத்திரத்தில் கூடும். அநேக புத்திமான்கள் தமிழில் உபந்நியாசம் செய்வார்கள்.

* * * *

## வால் நக்ஷத்திரங்கள்.

ஜோதிஷ சாஸ்திரி ஹாலி என்பவரால் கண்டுபிடிக்கப்பெற்ற மஹாநீண்டவாலுள்ளநக்ஷத்திரம் சூரியபிம்பத்திற்குக்குறுக்கே சென்ற மேமீ 19உ சென்றது. பின்பு அதனுடைய வாலின்மத்தியில் ஊடுருவி பூமியானது தன்னுடைய வழக்கமான சலநத்தை நடத்தியது. இந்த வால்நக்ஷத்திரத்தின் வாலின் பெரும்பாகம், மகா நுண்ணிய ஆவிபோன்ற திரவியங்களால் அமைக்கப் பெற்றிருந்தமையால், அவ்வாலின் தாக்குதலால் பூமிக்கு எவ்விதமான கெடுதலும் ஏற்படக்கூடியதில்லை. ஏற்படவுமில்லை. வால்நக்ஷத்திரத்துக்கு தூமகேது என்று வராஹமிஹிரர் பிருஹத்சம்ஹிதையில் பெயர்கொடுத்திருக்கிறார். மேற்சொன்ன தூமகேதுவானது சூரியபிம்பத்துக்குச் சமீபிக்குமுன் கிழக்குத் திக்கில், அடிவானம்முதல் ஆகாசமுகடுவரையில், அகன்றதும், நீண்டதுமான வாலுள்ளதாகப்பலநாள் சூரிய உதயத்திற்கு முன் தோன்றியது. எல்லோரும்பார்த்திருக்கலாம். பின்பு

மேற்குத்திக்கில், அஸ்தமித்த உடனே சிறுவாலுள்ளதாக ஒரு நக்ஷத்திரமே சென்றமீ 22-ம் தேதி முதல் தோன்றிக்கொண்டு வந்தது. இன்னும் இருவால் நக்ஷத்திரங்கள் சமீபத்தில் தோன்றப்போகின்றதாக ஜோதிஷசாஸ்திரிகள் கணித்திருக்கிறார்கள். இம்மாதிரியாக சிறிதும் பெரிதுமாக 1000வால்நக்ஷத்திரத்திற்குமேல் இருக்கின்றனவென்று பராசரர் சொல்லியிருக்கின்றதாக வராஹமிஹிரர் பிருஹத்சம்ஹிதையில் சொல்லுகிறார். மேற்படி வால்நக்ஷத்திரங்கள், நனிநீண்ட கோழிமுட்டைபோன்ற வட்டமாக சூரியனைச்சுற்றி வருகின்றன. இவைகளில், சிலஸ்தூலகண்களுக்கு புலப்படும், பெரும்பான்மையானவை, தூரதிருஷ்டிக்கண்ணாடிக் குழாயின் மூலமாய்ப் பார்த்தால்தான் புலப்படும். சிலசமயத்தில், இவைகள் சூரியனுக்கு அதிக சமீபத்தில் வரும். சிலசமயத்தில் வெகுதூரம் அதாவது லெக்ஷக்கணக்கான மைல்தூரம் சூரியனைவிட்டு விலகி நடைபெறும். வால்நக்ஷத்திரம் வாஸ்தவத்தில் நக்ஷத்திரம் அன்று. வால்நக்ஷத்திரம் மூன்றுவிதமான அம்சமுள்ளது. (1) அதிக பிரகாசமுள்ள பாகம் சிரசு. அது கூழாங்கற்களுடைய குவியல். அக்கூழாங்கற்கள் ஒன்றோடொன்று மோதி உரசுவதினால் பிரகாசம் ஏற்படுகின்றது. (2) இரண்டாவது அம்சம், சிரசுக்குச் சமீபத்தில் முந்தியதைவிட அதிக சிறிதான கூழாங்கற்களின் பெரிய குவியல். இக்கூழாங் கற்களும் ஒன்றோடொன்றுமோதிப் பிரகாசத்தை உண்டுபண்ணுகின்றன. (3) மூன்றாம்அம்சமான வால்பாகமானது, லக்ஷக்கணக்கானவிஸ்திரணமுள்ளது. இதுமுந்திய இரண்டு கூழாங்கற்குவியல்கள்மோதி உரசுவதினால் உண்டாகின்ற மகாநுண்ணிய தூளித்திரள். இதற்குஇயற்கையான பிரகாசமில்லை. மேற்படி வால்நக்ஷத்திரம் சூரியனைச் சமீபிக்கச்சமீபிக்க,சூரியனுடைய ரஸ்மிகள் இந்தவாலிலுள்ள தூளிகளின் மேற்பட, அது வரவர நீண்டுகொண்டு வருகிறதாக நமக்குத்தோன்றும். தூரத்திலிருக்கும் காலத்தில் மேற்படி தூளிகளின்மேல் விழுகிற சூரியரஸ்மியானது,நம்முடையபக்கமாகப்பிரதிபிம்பித்து வராததினால், வால்சிறியதாய் இருக்கிறதுபோலவும், இல்லாமல் போய்த்துப்போயிருக்கிறது போலவும், தோன்றுகிறது. வால் இயற்கையாக ஏற்பட்ட அளவுதான். சூரியனின் பிரகாசம் விரிவாய்ப் படுதலும், குறுகிப்படுதலும், படாமல் இருத்தலும், அதன் வால் முறையே

நீண்டதாகவும், குறுகியதாகவும், இல்லாமலும் தோன்றுதலுக்கும் காரணமாம். இந்தத் தர்மத்தை பிரகிருத வால்நக்ஷத்திரத்தின்கண் கண்டுருக்கலாம். சூரியனுக்குச் சமீபித்தபோது நீண்டு பெருகிக்கொண்டும், சூரியனைவிட்டுவிலகித்தூரமாகும்போது, சிறிதாகிக்கொண்டும், போதலை நாம்பார்த்தோம். வீட்டின் முகட்டு ஓட்டையின் வழியாக சூரியகிரணம் நுழைந்து ஆகாசத்தில் மிதக்கின்ற தூளிகளைப் பிரகாசப்படுத்துவதினால், அக்கிரணம் போம்வழி நம்கண்ணுக்குப் புலப்படுமாறு, இவ்வால்நக்ஷத்திரமும் நமக்குத் தோன்றுகின்றது என்று அறிக.

* * *

கைக்வார் மஹாராஜா அவர்கள் ஜப்பான் தேசத்திற்குப்போயிருக்கின்றார். அந்தத் தேசத்தின் நாகரீகம் பலவாறான கைத்தொழில் முயற்சிகளை நன்றாய் ஆராய்ந்து பார்த்துக்கொண்டிருக்கின்றார். பின்பு சாந்தசமுத்திரத்தின் (Pacific Ocean) சில தீவுகளைப் பார்வையிட்டு அமேரிககா கண்டத்திற்குப்போய் யாத்திரைசெய்து, அக்கண்டத்தின் அற்புதமான இயற்கைக் காக்ஷி செயற்கைக் காக்ஷிகளை எல்லாம் பார்த்து, பின்பு ஐரோப்பாகண்டம் மூலமாக , நம் தேசத்திற்குத் திரும்புவார். இவர் அதிபுத்திமான், நம் தேசஅபிமானம் உள்ள பிரபு. இவர்கள் ராஜாங்கத்தின் ஜனங்களுக்கு அநேகவிதமான உதவிகள் சீர்திருத்தங்கள் செய்திருக்கின்றார்கள். இத்தகைய ராஜாக்கள் பலதேசங்கள் சென்று யாத்திரைசெய்து, அத்தேசங்களின் நலங்களை நம் தேசத்தில் ஏற்படுத்தி நம் தேசத்தைச் சீர்மைப்படுத்தி மேன்மைபடையும்படி செய்வார்களாக.

* * * *

ஓர் வியசனகரமான மரணம்:— நமது ஞானசகோதரர் A. S. வைத்திநாதஅய்யர்அவர்கள் B.A. என்பார்நீர்ரோகத்தால்அசௌக்கியமாகஇருந்தார். பிளவைகண்டு(operation)ரணவைத்தியசிகிச்சைசெய்தும், குணப்படாமல் சென்றமீ 25௨ தஞ்சாவூரில் இறந்துபோய்விட்டார். உயர்ந்தஉத்தியோகமாகிய(inspector of schools)உத்தியோகத்தில்இருந்தார். நல்லபுத்திமான், நல்லகுணமுள்ளசீலர். நமது பத்திரிகை நல்ல ஸ்திதிக்கு வரவேண்டுமென அன்பு ஆதரவுடனே ரூ 100நன்கொடைபாகத் தாமே அனுப்பினார். மஹாத்மாக்களின்கிருபையால், சீக்கிரம் இப்பூமியில்பிறந்து, இன்னும் சபையாரின் நற்காரியங்களை நடத்தும்படியான பாக்கியம் பெறுவாராக.

கும்பாபிஷேகங்கள்:—சென்ற ஜூன்மீ 26, 27உகளில்நான்கு கும்பாபிஷேகங்கள் விஸ்தாரமான வைபவங்களுடனே நடத்தப்பெற்றன மதுரைஜில்லா காளையார்கோவிலில்ஒன்றும்; ஷைஜில்லாபழநியில் மலை உச்சியில் இருக்கின்ற தண்டாயுதபாணி விக்கிரகத்திற்கும், மலைஅடிவாரத்திலுள்ள குழந்தைவேற் பெருமானுக்கும் ஆக இரண்டும், திருச்சினாப்பள்ளிஜில்லாஅகண்டகாவேரித்தென்கரையில் திருப்பராய்த்துறை க்ஷேத்திரத்தில் ஒன்றும், ஆக நான்கு இடங்களிலுள்ள சிவக்ஷேத்திரங்களில் நடந்தன. பழநிமலை உச்சியில் உள்ள தண்டாயுதபாணிவிக்கிரகத்தின்கும்பாபிஷேகச்செலவுபெரும்பாலும்பிராமணர்களாலும், மற்றைய மூன்றுகும்பாபிஷேகங்களின் செலவு பெரும்பாலும்நாட்டுக்கோட்டைச்செட்டிகளான நகரத்தார்களாலும், நடத்தப்பெற்றன. கும்பாபிஷேகம்என்ற கிரியையானது இதுவாம். ஜீர்ணமாகப்போயிருக்கும் ஆலயங்களுக்கு அவசியமான மராமத்துக்கள்செய்து, சீர்படுத்தியும், கற்பக்கிரகங்களில்வேண்டிய மராமத்துக்கள்செய்தும், அதன்மேல் கற்பக்கிரகத்திலுள்ள முக்கிய மூர்த்தியின் *கலையை வேத ஆகமசாஸ்திரங்களின் முறைப்படி மந்திர மூலமாக ஜலமுள்ள கலசங்களில் ஆகரிஷித்து, அவ்விதம் ஆகரிஷித்துவைக்கப்பெற்ற கலசங்களுக்குப்பிராமணர்கள்மூலமாக மந்திர உச்சாரணம், தியான முதலிய கிரியைகள் செய்து, ஆகரிஷித்த கலாசக்தியை விருத்திப்படுத்தி, பின்பு குறிப்பிட்ட நல்லவேளையில், திரும்பவும் அந்தந்தமூர்த்திகளுக்குக் கும்பத்திலுள்ள மந்திரசக்தி ஆர்ந்தஜலங்களை அபிஷேகம்செய்விக்கலாம்.(Leyden Jar battery) என்ற மின்சாரகலசத்தில் மின்சாரசக்தியைச்சேர்ப்பித்துவைத்தாற்போல, இக்கிரியை நிகழ்வது. சிலவருஷங்களுக்கு ஒருமுறை, முக்கியமாக25 வருஷங்களுக்கு ஒருமுறையாவது, இவ்விதம் ஈசுவர மூர்த்திகளுக்கு மந்திரமூலமாகக் கலைகளை விர்த்திபண்ண வேண்டுமென்பதுஆகமங்களின் துணிபு. இப்படிச்செய்தல் ஜனங்களுக்கு க்ஷேமகரமாகும்.

ஷை பிரகிருத கும்பாபிஷேகங்களுக்கும் அவைகளின் முன்னர் நடந்த மராமத்து வகையறா கட்டிடங்களுக்கும், சுமார் 10 லக்ஷரூபாய்க்குமேல் செலவாயிருக்கிறதாக மதிக்கலாம்.

இங்கிலாந்தில் லன்காஸ்டர் என்னும் பட்டணத்தில் ஆரிய சமாஜத்தைச்சேர்ந்த ஒரு ஹிந்துவானவர் ஒரு ஆங்கிலப்பெண்ணை சென்ற எப்பிரல்மீ 27உயில் விவாகம் செய்துகொண்டார். பஞ்சாபியாகிய லாலா ராஜ்புத்திரரே என்பார் விவாகக்கிரியைகளை வேத மந்திரத்துடனும், அக்நிவளர்த்து ஹோமத்துடனும், புரோஹிதராக இருந்து நடப்பித்தார். இது இக்காலத்தின் புதுமை. இஃது இனி வரப்போகும் உலககதியைக் குறிப்பிக்கின்றதாக அறியலாகும்.

பத்திராதிபர்.

## புத்தக வரவு.

—0—

திருக்குறள் பரிமேலழகருரையுடன் பாக்கெட் சைஸ்:—தமிழ் வேதம் என்று சொல்லப்பெறும் இப்புத்தகம் எத்தனையோ பதிப்புக்கள் ஏற்பட்டிருந்தும், இன்னும் புதியபுதிய பதிப்புக்கள் ஜனங்களின் சௌகரியத்திற்கு ஏற்ப, உண்டாகிக் கொண்டிருக்கின்றன. பிரகிருதபதிப்பு செந்தமிழ்ப் பத்திராதிபர் மகா-ள-ள-ஸ்ரீ மு. ராகவ அய்யங்கார் அவர்களால் பரிசோதிக்கப்பட்டு, மதுரை விவேகபாநு அச்சியந்திரசாலையில் பிரசித்தஞ் செய்யப்பட்டிருக்கிறது. இஃது உயர்ந்த பதிப்பாகிறது. அருமையான பரிமேலழகருரையை சிறு அக்ஷரங்களில் குறள்வடிவுள்ளதாக, வெளிச்சொக்காப்பையில்வைத்துக்கொண்டுபோக இயல்புடையதாக, ஏற்பட்டிருக்கிறது. முகவுரையின் கண் அதிக நுண்ணிய விஷயங்கள் குறிப்புக்களாக வெளியிடப்பட்டிருக்கின்றன புஸ்தகத்தின் உயர்வை உத்தேசிக்க இதன் விலை ஒரு ரூபாய் அதிகமல்ல. இப்புஸ்தகத்தை நம்மவர் எல்லோரும் வாங்கிப்படித்து இன்றியமையாத தோழனாக இதனைக்கைக்கொள்ளவேண்டும்.

மஹாவித்துவான் ஸ்ரீமீனாட்சிசுந்தரம்பிள்ளை அவர்கள் பிரபந்தத்திரட்டு:— மஹாமஹோபாத்தியாயர் ஸ்வாமிநாதையரவர்களால் தம்முடைய உபாத்தியாயரான புகழ்பெற்ற மஹாவித்துவான் ஸ்ரீ மீனாட்சிசுந்தரம்பிள்ளை அவர்கள் பலக்ஷேத்திரங்களைப்பற்றியும், ஈசுவர மூர்த்தங்களைப்பற்றியும், பாடிய பாசுரங்களையும், பலபுஸ்தகங்களுக்குச்சிறப்புப்பாயிரங்களாக, செய்துள்ளபாடல்களையும் பெரும்பான்மையானவைகளைத்திரட்டி செவ்வனே ஆராய்ச்சிசெய்து உலகஉப

காரமாகத் தம்முடைய குருவின்மீது தமக்கிருந்த அன்பின்மிகுதியால், பிரசித்தம்செய்திருக்கின்றார்கள். அம்மஹாவித்துவான் அவர்களின் செய்யுட்கள் பொருட்சுவை, சொல்வனப்பு அமைந்திருக்கின்றமை தமிழ்வித்துவான்கள் யாவரும் அறிந்த விஷயமே. நம்முடைய அய்யரவர்களால் பிரசுரம் செய்யப்பட்டிருக்கும் அளவிறந்த புஸ்தகங்களில் இப்புஸ்தகம் ஒன்றுக்குத்தான், அரும்பதவிளக்கம் எழுதாமல் விடப்பட்டிருக்கின்றது. இவர்கள் அதிகவேலை கொண்டவர்கள். எப்பொழுதும் தமிழ் பழைய ஏடுகளை ஆராய்ச்சிசெய்துகொண்டிருக்கின்றார்கள். தமிழ்ப்பாஷைக்கு தம உடல், பொருள், ஆவி மூன்றையும் ததத்தம்செய்துகொண்டு வருகிறார்கள். இத்தகையவர்கள் மேல்நாட்டில் இருந்தால், உலகயாத்திரை சரியாகநடக்கவும், புஸ்தகங்களைப்பிரசித்தப்படுத்தவும், ராஜாங்கத்தாரும், பிரபுக்களும் ஏராளமான திரவியசகாயம் செய்து அவர்களை நன்கு ஆதரிப்பார்கள். அப்படிச் செய்வதினால், அவர்கள் காலத்தை, இன்னும் அதிகப் பிரயோஜனகரமாக ஆகும்படி செய்துவைப்பார்கள். உலக யாத்திரைக்காக இன்னும் அவர்கள் உத்தியோகத்தில் இருக்கும்படி நேரிட்டிருக்கிறது என்பது வியசனமாக இருக்கிறது. அதற்குக்காரணம் நம் நாட்டார் நம் தமிழ்ப்பாஷையின்மேற்கொண்டிருக்கும் அபிமானம், வார்த்தை மட்டில்தான் நிற்பதாகுமெனத்தோன்றுகிறது. பிரகிருத புஸ்தகத்திற்கு அரும்பத உரை மிகமுக்கியமானது. அது வெளிவராதது ஒரு பெரிய குறையே. அதற்கு நம்மவர்களின் ஆதரவு இன்மையே பெருத்தகாரணமாகும் இவர்களால் வெளிவந்திருக்கும் புஸ்தகங்களையாவது நம்மவர்கள் வாங்குவார்களாகில் அதுவே பெரிய ஆதரவாகும்.

சர்வ தரிசன சங்கிரகம்:—இஃது ஸ்ரீ வித்தியாரண்ணிய சுவாமிகளால், ஸம்ஸ்கிருதபாஷையில்எழுதப்பெற்ற உயர்ந்த பெயர்போன நூல்; நடுநிலையிலிருந்து யாதொரு பக்ஷபாதமின்றி அவர்கள்காலத்தில் நடைபெற்ற 16வித மதஅபிப்பிராயங்களை யாவரும் தெரிந்துகொள்ளும்படியாக அம்மஹான் இக்கிரந்தத்தைச்செய்துள்ளார். ஒரு பாஷையை மாத்திரம் படித்தவனும், ஒருமதத்தில் மாத்திரம் பயிற்சியுள்ளவனும், உண்மையைச் சரியாகத்தெரிந்தவனாகான் என்பது அறிஞரின்கொள்கை. வேறு ஒரு பாஷையையாவது அறியவேண்டும். வேறு ஒரு மதத்தையாவது அறியவேண்டும். அப்போது தன் பாஷையின் மகிமையும் தன் மதத்தின் உண்மையும் நன்றாய் பலப்ப

டும் அதனால் அத்வைத வேதாந்தத்தை ஜனங்கள் அறிந்து ஆதரவு செய்யவேண்டுமென்றும், அதன் உயர்வும் மஹிமையும் பிரகாசிக்கும்படியுமாக இச் “ சர்வதரிசனசங்கிரகம் ” என்ற நூல் ஏற்பட்டது. இஃது இதுகாறும் தமிழ்ப்பாஷையில் மொழிபெயர்க்கப்படாமலிருந்து மகா-ள-ள-ஸ்ரீ வடிவேலுசெட்டியார் அவர்களுடையவும். மகா-ள-ள-ஸ்ரீ ம. சண்முகமுதலியார் அவர்களுடையவும் நன்முயற்சியால், பிரஹ்மஸ்ரீ ராமச்சந்திர சாஸ்திரிகளின் உதவியால் மொழிபெயர்க்கப்பெற்று ஷை இரண்டு தமிழ்வித்துவான்களால் செவ்வியநடையில்எழுதப்பெற்று,பிரசித்தப்படுத்தப்பட்டிருக்கின்றது. தமிழ்நாட்டார் இவ்விருவர்களுக்கும் நன்றிபாராட்டக்கடவர். இத்தகையபுஸ்தகம் அச்சியற்றி வெளிவருகிறதற்கு திரவியச்செலவும், சரீரப்பிரயாசையும் அதிகமாகவிருக்குமென்று நம்முடைய சொற்ப அனுபவத்தாலும் அறிவோம். உயர்வையும் நல்லபதிப்பையும் உத்தேசிக்க இப்புத்தகத்தின் விலை ரூ 2—8—0 மிகவும்குறைவானது. இப்புத்தகம் ஆங்கில பாஷையிலும் மொழிபெயர்த்துள்ளது அதன் விலை ரூ 7—8—0. இப்புத்தகம் எளியநடையாக, அதிகசந்திகளைத் தவிர்த்துத் தெளிவாய் எழுதப்பட்டிருக்கிறது. சிரத்தையுடன் வாசிப்பவர் யாவரும் விஞ்ஞான பயிற்சியால் மிக்க சந்தோஷத்தை அனுபவிப்பார்கள். இப்புத்தகம் பிரஹ்மஞான சபையைச் சேர்ந்த ஒவ்வொருவரும் வாசிக்கத்தக்கது. அவர்களுக்கு மிகவும் பிரயோஜனகரமானது. அவர்கள் சமயமுறைகளின் ஆராய்ச்சியில், இஃது இன்றியமையாத துணையாம். சிவஞானசித்தியார் முதலான சைவசித்தாந்த நூல்களுக்கு இப்புத்தகம் கருவூல (பொக்கிஷ) மாக இருந்த தென்றால் இப்புத்தகத்தின் உயர்வையும், பிரயோஜனத்தையும், நாம் எடுத்துச் சொல்வது மிகையாம்.

## கைம்மாறு பத்திரிகைகள் வரவு.

1. The United India and Native States.
2. வித்தியாபாநு, வைகாசிமீ மதுரை.
3. விவேகசிந்தாமணி, எப்பிரல் மே ஜூன் மாசங்களின் பத்திரிகை. மைலாப்பூர்.
4. வஸந்தா, மேமீ காரைக்கால்.
5. செந்தமிழ், சாதாரணஹு சித்திரைமீ மதுரை.
6. பிரஜாநுகூலன், திருச்சிநாப்பள்ளி.
7. விவேகபோதினி மைலாப்பூர்.
8. சக்ரவர்த்தனி, திருவல்லிக்கேணி.

பத்திராதிபர்.

———

113

# பூர்ணசந்திரோதய விளம்பரம்.

—0—

## சந்தா விவரம்,

வருஷ சந்தா தபாற்கூலியுடன் ரூ இரண்டுதான்.

தனிப்பிரதி விலை அணா 4.

## விளம்பர விகிதம்,

| விளம்பர விகிதம் ஒரு பக்கத்துக்கு | | அரைப்பக்கத்துக்கு. | |
|---|---|---|---|
| மாசம் | ரூ 2—8—0 | மாசம் | ரூ. 1—8—0 |
| 3 மாசத்திற்கு | ,, 6—0—0 | 3 மாசத்திற்கு | ,, 3—8—0 |
| 6 ௸ | ,, 11—0—0 | 6 ௸ | ,, 6—0—0 |
| 1 வருஷத்துக்கு | ,, 18—0—0 | 1 வருஷத்துக்கு | ,, 10—0—0 |

சந்தா முதலிய யாவும் அடியிற்கண்டவருக்கு அனுப்பவேண்டும்.

ப. நாராயண அய்யர்.

பத்திராதிபர், 'பூர்ணசந்திரோதயம்' மதுரை.

---

| | | |
|---|---|---|
| பிராசீன தர்மங்களின் உயர்வும் இக்கால ஆசாரங்களும் | | விலை அணா |
| மனிதன் வம்சாவளியின் உண்மை | ... ... | ,, |
| ஹிந்துமத தூஷணைபரிகாரம் | ... ... | ,, 4 |

Avayar's Yoga Aphorisms in English Price 8 Annas.

தபாற்கூலி பிரத்தியேகம்.

வேண்டுவோர் அடியிற்கண்டவர்களிடம் பெற்றுக்கொள்ளலாம்.

ப. நாராயண அய்யர்,

பிரசிடெண்டு, பிரஹ்மஞானசபை, மதுரை.

அல்லது,

Manager, Theosophist Office. Adavar, Madras. S.

---

☞ திருக்குறள். பரிமேலழகருரையுடன் பாக்கட் சைஸ். புதிய பதிப்பு. உயர்ந்த கலிக்கோபயிண்டு. அரிய பலசீர்திருத்தங்களு டன் அழகாக நல்ல கிளேஸ் காகிதத்தில் அச்சிடப்பெற்றது. விலை ரூ ஒன்று (தபாற்கூலி வேறு.) வேண்டுவோர் மதுரை விவேக அச்சியந்திரசாலையிற் பெறலாம்.

ஓம்

# பூர்ணசந்திரோதயம்,

## ஓர் விஞ்ஞாபனம்.

---

நம் தேசத்தில் வடமொழி தென்மொழிகளில் மஹான்களால் உபதேசிக்கப்பெற்றுள்ள உண்மைகளும், பிரஹ்மஞான சபையாரால் ஆங்கிலத்தில் வெளிவந்துள்ள புஸ்தகங்களிலுள்ள உண்மைகளும், ஜனசமூகத்திற்குரிய பொதுவான தர்மங்களும் நீதிமுறைகளும், சீர்திருத்த முறைகளும், தக்க வித்வான்களைக்கொண்டு வியாசங்கள் ரூபமாய் இப்பத்திரிகையில் வெளியிடப்படும். பொதுவாய், ஜனங்களுக்குள் ஞானம்பரவி அபிவிருத்தியாக வேண்டுமென்ற நோக்கத்துடன் இப்பத்திரிகை ஏற்பட்டதேயன்றி, பணலாபம் சம்பாதிக்க வேண்டுமென்ற கருத்துடன் அன்று. பத்திராதிபரும், வியாசம் எழுதி உதவுகின்றவர்களும், பணவிருப்பமின்றி, இனாமாக வேலைசெய்கின்றார்கள்.

50ரூ. க்கு குறையாமல் நன்கொடை [illegible]ர்களுக்கு தங்கள் ஆயுள்காலமுழுமையும், இப்பத்திரிகை பிரசுரமாகும் காலத்தில், மாசம் ஒரு பிரதி மறுபடி சந்தாப் பொறுப்பின்றி அனுப்பப்படும். அவ்விதம் உதவிபுரிகிறவர்கள் பெரிய உபகாரிகள். வருஷ சந்தாதார்களும் உதவிபுரிகிறவர்களாவார்கள். இப்பத்திரிகையைப் பரவச்செய்யும்படி பிரார்த்தனை. தனிப்பத்திரிகை 4 அணா.

ப. நாராயணன்.

“பூர்ணசந்திரோதயம்” பத்திராதிபர். மதுரை.

## அறிவிப்பு.

---

இப்பத்திரிகைக்கு வியாசங்கள் எழுதுகிறவர்கள் ஒருபக்கத்தில், யாவருக்கும் பயன்படும்படி, எளிய தமிழ்ப்பாஷையில் சுருக்கமாக போதுமான மார்ஜின்விட்டு. எழுதிக்கண்டவருக்கு அனுப்பும்படி பிரார்த்திக்கப்படுகிறது.

ப. நாராயணன்.

“பூர்ணசந்திரோதயம்” பத்திராதிபர், மதுரை.

---